# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஏப்ரல் 2001 ஜீவியம் 6 மலர் 12**

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் | 2 |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 10 |
| இம்மாதச் செய்தி | 16 |
| பகவானுடைய இதர நூல்கள் | 17 |
| சிறு குறிப்புகள் | 19 |
| அன்பர் கடிதம் | 21 |
| சாவித்ரி | 23 |
| லைப் டிவைன் - கருத்து | 25 |
| புதுயுகமான புது வருஷம் | 27 |
| அஜெண்டா | 33 |
| கன்சல்டன்சி | 35 |
| புனர் ஜென்மம் | 37 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 44 |


* * *

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

# லைப் டிவைன்

கர்மயோகி

## X.The Pure Existent

*P. No. 76*
*Para No.10*

**We may accept the pure reason.**
**We may accept our concepts.**
**We may subject ourselves to it.**
**We may remain under its spell.**
**Then it is valid.**
**It is not valid, if we do not accept pure reason.**
**Reason has no obligatory force.**
**Neither do its concepts have it.**
**We must judge of existence.**
**We must not rely on mental conception.**
**We can rely on what we see to exist.**
**The purest insight sees it as movement.**
**The freest insight too finds it as movement.**
**Two things stand out.**
**One is movement in Space.**
**The other is movement in Time.**
**One is objective.**
**The latter is subjective.**
**Existence is real.**
**Duration is real.**
**Space and Time are real.**
**We can go behind extension in Space.**
**It is a psychological phenomenon.**



## 10. சத் புருஷன்

பகுத்தறிவை நாம் ஏற்கலாம்.
அதன் கருத்துகளை ஏற்கலாம்.
நாம் அதற்கு உட்படலாம்.
அதன் மந்திரச் சக்திக்கு நாம் கட்டுப்படலாம்.
அதை ஏற்றால், அது செல்லும்.
பகுத்தறிவை நாம் ஏற்காவிட்டால் அது செல்லாது.
நம்மைக் கட்டுப்படுத்தும் சக்தி பகுத்தறிவுக்கில்லை.
அதன் கருத்துகளும் நம்மைக் கட்டுப்படுத்தா.
சத் புருஷனை நாம் அறியவேண்டும்.
மனம் கூறும் கருத்தை நாம் நம்ப முடியாது.
நாம் காண்பதை நம்பலாம்.
ஊடுருவும் பார்வைக்கு அது சலனம்.
புதிய பார்வைக்கு அது சலனமாகும்.
இரு விஷயங்கள் தெளிவு.
ஒன்று இடத்தின் சலனம்.
அடுத்தது காலத்தின் அசைவு.
ஒன்று புறம்.
அடுத்தது அகம்.
சத் புருஷன் என்பது உண்மை.
காலம் என்பதும் உள்ளது.
காலமும், இடமும் உள்ளன.
இடத்தைக் கடந்து பின்னால் பார்க்க முடியும்.
அது மனம் அறியும் நிகழ்ச்சி.

**It is an attempt of the mind.**
**That makes existence manageable.**
**It distributes the indivisible whole.**
**That is conceptual Space.**
**We cannot go behind the movement of succession.**
**Succession is change in Time.**
**Time is the very stuff of consciousness.**
**We are a movement.**
**The world too is a movement.**
**It continually progresses.**
**It increases by all of the past.**
**It is represented in the present.**
**We see it as a beginning of the future.**
**That present eludes us.**
**It perishes before it is born.**
**What is, is the eternal.**
**It is indivisible succession of Time.**
**It carries on a stream of movement.**
**It is progressive.**
**Its consciousness also is indivisible.**
**Duration is the sole absolute.**
**It is eternally successive movement.**
**It is change of Time, change in Time.**
**Becoming is the only being.**

**There is an actual insight into being.** **Page No. 77**
**There are conceptual fictions of it.** **Para No. 11**
**There is an opposition between them.**



அது மனம் எடுக்கும் முயற்சி.
அதனால் சத் புருஷனை அறிய முடிகிறது.
பிரிக்கமுடியாத முழுமையை அது பகிர்ந்தளிக்கிறது.
நாம் இடம் எனக் கூறுவது அதுவேயாகும்.
காலத்தைக் கடந்து அதன் பின்னால் பார்க்க முடியாது.
சங்கிலித் தொடர் காலம் மாறுவதாகும்.
காலம் ஜீவியத்தின் கரு.
நம் வாழ்வு சலனத்தாலானது.
உலகம் அது போன்றது.
உலகம் தொடர்ந்த முன்னேற்றம் பெறுகிறது.
கடந்தகால நிகழ்ச்சிகளால் அது பெருகி நிற்கிறது.
அதுவே நிகழ்காலமாகிறது.
நாம் அதை எதிர்காலத்தின் ஆரம்பமாகக் கொள்கிறோம்.
நிகழ்காலம் நமக்குப் பிடிபடுவதில்லை.
அது ஜனிக்குமுன் அழிகிறது.
உள்ளது, என்றும் உள்ளது - பிரம்மம்.
அது காலம், காலத்தின் கதி. அதைப் பகுதியாகப் பிரிக்க முடியாது.
அது சலனத்தின் ஆற்றொழுக்கு.
முன்னோக்கிச் செல்லும் நதி போன்றது.
அதன் ஜீவியமும் முழுமையானது.
காலம் தூய்மையான தனித்த நிலை.
தொடர்ந்து ஊரும் காலம் வளர்ந்துவரும் ஜீவ நதி.
காலத்தின் கதியில் மாற்றம், காலத்தின் மாற்றம்.
பிரகிருதியே புருஷன்.

பார்வை புருஷனை ஊடுருவும்.
கருத்தின் கற்பனையும் புருஷனைத் தொடும்.
அவை முரணானவை.

**The concept is of pure Reason.**
**The opposition is fallacious.**
**That is the reality of it.**
**There is fundamental insight.**
**There also is conceptual reasoning.**
**One is of intuition.**
**The other is of intelligence.**
**If they are opposed to each other, we cannot support the latter.**
**We appeal to the intuitive experience.**
**It is incomplete.**
**It is valid upto a point.**
**There is the integral experience.**
**It stops short of it.**
**If so, it errs.**
**Intuition fixes itself on becoming.**
**Then we see movement and change.**
**It is a continual progression.**
**It is eternal succession in Time.**
**We are the river.**
**We are the flame.**
**They are the Buddhist illustrations.**
**But there is a supreme experience.**
**There is a supreme intuition.**
**Through them, we can go behind the surface.**
**There is this becoming.**
**It is a change, a succession.**



கருத்து பகுத்தறிவுக்குரியது.
முரண்பாடு கற்பனையானது.
இதுவே உண்மை.
அடிப்படையை ஞானம் ஊடுருவும்.
கற்பனையும் கருத்தைப் புனையும்.
ஒன்று ஞானம்.
அடுத்தது அறிவு.
அவை முரண்பட்டால் நாம் அறிவை ஏற்கமுடியாது.
ஞானம் உதயமாகும். அதை நம்பலாம்.
அது அரைகுறையானது.
ஓரளவுக்கு அது உண்மை.
முழுமையான பூரணம் அனுபவம் தரும்.
அதை எட்டுமுன் நிறுத்திவிடுகிறோம்.
அப்படிச் செய்தால், அது தவறு.
ஞானம் பிரகிருதியின் சலனத்தை நாடுகிறது.
அதனால் சலனமும், மாற்றமும் தெரிகின்றன.
அது தொடர்ந்த முன்னேற்றம்.
அது தொடர்ந்து ஊரும் காலம் வளர்ந்து வருவதாகும்.
நாமே ஓடும் நதி.
நாம் எரியும் தழல்.
பௌத்தம் தரும் உதாரணங்கள் இவை.
ஓர் உச்சகட்ட ஆன்மீக அனுபவம் உண்டு.
ஓர் உச்சகட்ட ஞானமுண்டு.
திரையை அவற்றால் விலக்கிப் பின்னால் காணலாம்.
அதுவே சிருஷ்டி.
அது மாற்றம், தொடர் சங்கிலியான செயல்கள்.

**It is only a mode of our being.**
**And there is in us That.**
**It is not involved in our becoming.**
**We can have the intuition of That.**
**That is eternal and stable in us.**
**We can have a glimpse of it.**
**It is an experience behind the veil.**
**The becomings in form are fleeting.**
**They are continual.**
**We can also draw back into the stable.**
**We can do so entirely.**
**And live there too.**
**It brings an entire change in our external life.**
**It changes our attitude.**
**Our action upon the movement of the world also is changed.**
**We can live in this stability.**
**Pure Reason has already given us this stability.**
**Without reasoning too, we can touch it.**
**We can reach it without knowing it.**
**No previous knowledge is necessary.**
**It is pure existence, eternal, infinite.**
**It is indefinable.**
**It is not affected by the succession of Time.**
**It is not involved in the extensions of Space.**
**It is beyond form, quality or quantity.**
**It is only Self, absolute.**

***contd...***



இவை நம் ஜீவனுக்குள்ள ஓர் அம்சமாகும்.
பிரம்மம் நம்மில் உள்ளது.
பிரம்மம் சிருஷ்டியால் பாதிக்கப்படாது.
ஞானத்தால் பிரம்மத்தைக் காணலாம்.
அது நிலையானது, காலத்தைக் கடந்தது.
அதன் சாயல் தெரியும்.
திரையின் பின்னுள்ள அனுபவம் அது.
ரூபத்தில் சிருஷ்டி தோன்றி மறையும்.
அது தொடர்ந்த செயல்.
நாம் அங்கு போய் அடையலாம்.
முழுவதும் அதை அடைய முடியும்.
அங்கேயே இருக்கலாம்.
நம் புறவாழ்வை அது புதியதாக்கும்.
நம் போக்கை மாற்றும்.
உலகின் போக்கில் நம் செயல் மாறும்.
இந்நிரந்தரத்தில் நாம் வாழலாம்.
பகுத்தறிவு இந்நிரந்தரத்தை நமக்களித்துள்ளது.
பகுத்தறியாமலும் நாம் இதையடையலாம்.
அதைத் தெரியாமல் அதை அடையலாம்.
முன்பே அறிய வேண்டுமென்ற அவசியமில்லை.
அது சத், புருஷன், அனந்தம்.
சொல்லைக் கடந்தது.
காலத்தின் கதி, அதை பாதிக்காது.
இடத்தில் அது உறைவதில்லை..
ரூபம், குணம், அளவைக் கடந்தது.
அது புருஷன், தனித்த தூய்மை.

தொடரும்....

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**641) சிருஷ்டியிலுள்ள பரம்பொருளும், அதற்கு முந்தைய நிலையிலுள்ள பரம்பொருளும் வேறு வேறல்ல. காலத்தால் அவை பிரிக்கப்பட்டவையல்ல. ஒன்றில் மற்றதுள்ளது. வெவ்வேறு பார்வைக்கு வெவ்வேறாக காட்சியளிக்கிறது. அதனால்தான் நம் பார்வை மாறினால் ஜடம் திருவுருமாறும் என்கிறார் பகவான்.**

*பார்வை மாறினால் ஜடம் திருவுருமாறும்.*

*மனம் மாறினால் வறுமை அதிஷ்டமாகும்.*

ஒருவரை மகன், தகப்பன் என்கிறார். அவரது தம்பி, அண்ணன் என்கிறார். தகப்பனாரும், அண்ணனும் ஒருவரே. அவர் தகப்பனாராக இருந்து அண்ணனாக மாறுவதில்லை. அவரிடம் மாற்றமில்லை. கூப்பிடுபவர்களில் உறவு மாற்றமுள்ளது. அவருடைய நிலையோ, அவரோ மாறுவதில்லை. தம்பிக்கு அண்ணனாகவும், மகனுக்கு தகப்பனாகவும் அவர் காட்சியளிக்கிறார். **Absolute, Relative** பரம்பொருள், சிருஷ்டி என இரண்டை நாம் அறிவோம். எனவே பரம்பொருள் சிருஷ்டியாக மாறியுள்ளது என்று நினைக்கின்றோம். நம்முள் ஆன்மா, மனம் என இரு பகுதிகள் உண்டு. ஆன்மாவிலிருந்து பார்த்தால் பரம்பொருளாகவும், மனத்திலிருந்து பார்த்தால் சிருஷ்டியாகவும் காட்சியளிப்பது ஒன்றே. மாறிய பார்வைக்கு மாற்றம் தெரிவதால், பகவான் நம் பார்வையை நாமே முனைந்து மாற்றிக் கொண்டால், தேவையான திருவுருமாற்றம் ஏற்படும் என்கிறார்.

நாம் மனம் மாறியவுடன் சூழ்நிலை மாறுவதை அனைவரும் கண்டிருக்கிறோம். சூழ்நிலை மாறுவதைப்போல் பொருள்களின் குணமும் மாறும். கடைசிக்கட்டமான உடல் திருவுருமாற்றமும் நடக்கும் என்று பகவான் குறிக்கின்றார்.



மனநிலை சிருஷ்டிக்கும் தன்மையுடையது. புது மனநிலையை நாம் சிருஷ்டித்தால், புது சூழ்நிலை, புது குணம், புதுப் பொருள் உற்பத்தியாவதைக் காணலாம்.

ஜடம் திருவுருமாற்றமடைவது பூரண யோகத்தில் கடைசி கட்டம். அதையும் மனமாற்றத்தால் நடத்த முடியும் என்கிறார். நம் மனத்தில் ஜடமான பகுதியும் உண்டு. (சிந்திக்கும் பகுதியும், உணரும் பகுதியும், ஜடமான பகுதியும் மனத்திலும் - உணர்விலும் - உண்டு). சிந்திக்கும் பகுதிக்கு ஜடமான பகுதி கட்டுப்பட வேண்டும். நடைமுறையில் ஜடமான பகுதிக்குச் சிந்திக்கும் பகுதி கட்டுப்பட்டிருக்கும். தலைகீழான நிலை இது. இது மீண்டும் தலைகீழாக மாறினால், ஜடம் கட்டுப்படும். கட்டுப்பட்ட ஜடம் அடுத்த நிலையில் உணர்வு பெறும். அடுத்த நிலையில் திருவுருமாற்றம் பெறும்.

நாம் மாறாமல், தானே, எதுவும் செய்யாமல் நிலைமை மாறுமா என மீண்டும், மீண்டும் எதிர்பார்ப்பதே நம் வழக்கம். செயலை மாற்றாமல், மனதை மாற்றிக் கொண்டு - அல்லது மாறியதாக நினைத்துக் கொண்டு - நிலைமை மாறவில்லை என்று குறைப்படுவதுண்டு. மனம் உண்மையாக மாறினால், அதற்குரிய மாற்றம் நிச்சயமாக இருக்கும்.

❊ ❊ ❊

**642) மனத்திலிருந்து சைத்தியப் புருஷனுக்குப் போவது என்பது, ஆசையால் பீடிக்கப்பட்டவன் அதை மீறிவந்து அதன் பலனைச் சிந்திப்பது போலாகும்.**

*ஆசையை விலக்கி பலனை நினைப்பது மனத்திலிருந்து சைத்தியப் புருஷனுக்குப் போவது போன்றது.*

நாம் மனத்தைப் பற்றி எவ்வளவு பேசினாலும், புலன்களை அறிவதுபோல் மனத்தை அறிவதில்லை. புலன்களை நாம் தெளிவாக அறிவோம். உணர்ச்சி நமக்குப் புரியக்கூடியது. அறிவுக்குரிய மனத்தை நாம் உணர்ச்சியை அறிவதுபோல் அறியமுடிவதில்லை. சைத்திய

புருஷன் ரிஷிகள் அறிவது. நம்மைப் பொறுத்தவரை அது ஒரு சொல்லேயாகும்.

நாம் செய்யும் முக்கியக் காரியங்களை நாம் உணர்வால் செய்கிறோமே தவிர மனத்தால், அறிவால் செய்வதில்லை என நாம் அறிவதில்லை. உணர்வால் செய்ய முடியாது. அறிவால்தான் செய்யவேண்டும் என்ற நிலை ஏற்பட்டவுடன் அறிவு ஸ்தம்பித்து நிற்பதைக் காணலாம். MLA வீட்டில் பையன் துடுக்காக நம் மகனை அடித்துவிட்டான், ரோட்டரி கிளப் செக்ரட்டரி பதவிக்கு NGO-வை நிற்கச் சொல்கிறார்கள், ஊரில் முக்கியப்புள்ளி வீட்டில் அண்ணன், தம்பி பாகப்பிரிவினையை பழைய நட்பு, உறவு கருதி சின்னபுள்ளியை மத்தியஸ்திற்கு அழைக்கிறார்கள் என்றால் இங்கெல்லாம் உணர்வால் செயல்பட முடியாது. MLA பையனை அடித்துவிட்டால் என்ன ஆகுமோ, ரோட்டரி கிளப் செக்ரட்டரியாக ஜெயித்தால் நிலைமையைச் சமாளிக்க முடியுமோ, பெரிய புள்ளி வீட்டுத் தகராறில் ஒரு பக்கம் தீர்ப்புச் சொன்னால் அடுத்தவருக்கு மனம் கசக்கும் என்றால், சாதாரண மனிதன் தன் அறிவைக் கலந்தால், ஒன்றும் புரியவில்லை என்று பதில் வரும். இதுபோன்ற சமயங்களில் நாலுபேர் செய்வதைப் போல் செய்வார்கள். அது மனத்தின் செயலன்று. சமூக உணர்வு. நாம் ஆசைப்பட்டு அதைத் திறமையாகப் பூர்த்திசெய்வதை அறிவின் செயலாகக் கொள்கிறோம். ஆசையும், திறமையும் உணர்வுக்குரியவை, அறிவுக்கன்று.

மனத்திலிருந்து செயல்படுதல் என்றால், உணர்வையும், ஊரையும் ஒதுக்கி வைத்துவிட்டு அறிவுக்குப் புலப்படுதலை அறிதல் என்று பொருள். சாதாரண மனிதனுக்கு அந்தச் சந்தர்ப்பம் வந்ததில்லை. வந்தால், அவனுக்குக் கட்டுப்பட்டவரிடமே அது எழும். அங்கு அறிவு தெளிவுபடாது. அறிவால் தெளிவாகச் செயல்படுபவர் குறைவு. அவர்களே சைத்தியப்புருஷனை அடைய முயல்வது பலிக்கும். அவர்களுக்கு அது பெருமுயற்சி. ஆசை தன்னை ஆட்கொண்ட நிலையில் மனிதன் ஆசையை அறிவான். அதையே அறிவாகக் கொள்வான். 15 M.P.க்கள் ஜனாதிபதியைக் கண்டு



பேசிவிட்டு வெளிவந்த பொழுது, அனைவரும் போய்க் கொண்டிருந்தபொழுது ஒருவர் பின்னால் தயங்கி நிற்பதைப் பார்த்து, என்ன யோசனை என்றொருவர் கேட்டார். ‘இந்த மாளிகைக்கு என்று நான் அதிபதியாவேன்?’ என்றார். இவருடைய நிலையே ஆசையால் பீடிக்கப்படுவது. 65 வயதான உலகப்புகழ் பெற்ற பெரிய மனிதன் விருந்திற்குப் போன இடத்தில் ஒரு பெண்ணை வைத்த கண் வாங்காமல் வெட்கமின்றி பார்த்துக் கொண்டேயிருப்பதை அவரால் அறிய முடியவில்லை, தவிர்க்க முடியவில்லை. இவர்கள் ஆசையை விட்டகன்று, நிதானமாய்ச் சிந்திப்பது இந்த ஜன்மத்தில் முடியாது. அதுபோல் அறிவில் தெளிவுள்ளவன், அதைக் கடந்து வந்து ஆன்மாவைச் - சத்தியம் - நாடுவது முடியாது. யோகத்தை மேற்கொள்பவருக்கும், அருளுக்கும் பாத்திரமானவர்க்குமே உரியது அப்பாதை. இருமுயற்சிகளுக்கும் கடக்க வேண்டிய தூரம் ஒன்றேயாகும்.

❈ ❈ ❈

**643) நாம் கேட்பதை, தாங்கள் மகிழ்ந்தபொழுது தெய்வங்கள் நமக்கு வரமாக அளிக்கின்றன. பிரம்மம் தன்னிடமிருந்து எதையும் மனிதன் தன் திறமையால் பெறுவதை அனுமதிக்கின்றது. அன்னை நம்மால் பெற்றுக்கொள்ள முடியும் அத்தனையையும் நமக்களிக்க ஆர்வமாக இருக்கிறார்.**

*கேட்டதைக் கொடுக்கும் தெய்வம்.*

*எதையும் பெறவும் அனுமதிக்கும் பிரம்மம்.*

*பெறும் அளவுக்குத் தரும் அன்னை.*

ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகியவற்றிற்குரிய தெய்வங்களுண்டு என்பது நம் மரபு. தெய்வலோகத்து தெய்வங்களுக்கில்லாத சக்தியில்லை. அவர்களுடைய சக்தி அளவில்லாதது. தெய்வங்கள் பூமியின் அளவுடையவர்கள் என்கிறார்

அன்னை. பிறப்பாலும், அமைப்பாலும் தெய்வங்களுக்குப் பூமியுடன் தொடர்போ, அக்கறையோ இல்லை என்கிறார் அன்னை. அதனால் மனிதன் தெய்வத்தோடு தொடர்பு கொண்டு ஏதாவது பெற வேண்டுமானால், அவர்கள் மனதை எட்டும் மார்க்கத்தை பூஜை, ஸ்தோத்திரம், திருவிழா, தவம், யோகம், மந்திரம் போன்றவற்றால் எட்ட முடியும் என்று கண்டு கொண்டுள்ளான். அப்படி எட்டினால், எட்டும்பொழுது தெய்வம் மகிழ்ந்தால், மனிதன் கேட்பதைக் கொடுக்கிறது என்று நாம் புராணங்கள், இதிகாசங்கள் மூலமாக அறிவோம். தெய்வத்தையும், சத்திய ஜீவியத்தையும், சச்சிதானந்தத்தையும் கடந்துள்ளது பிரம்மம். பிரம்மமே அனைத்திற்கும் ஆதி. தானே பிரம்மம் எவருடனும் தொடர்பு கொள்ளவில்லை என்றாலும், தன்னையடைந்தவர் எதைக் கேட்டாலும் கொடுக்கவல்லது. பிரம்மத்தை அடைபவர்கள் எதையும் - பொன், பொருள் - கேட்கும் நிலையிலிருப்பதில்லை. பிரம்மத்துடன் கலப்பதை விழைபவர்களே பிரம்மத்தை எட்டுவதால் கேட்பது, கேட்டுப் பெறுவது என்பது அங்கிருப்பதில்லை.

பகவான் ஸ்ரீ அரவிந்தர் இறைவனிடம் கேட்டது பற்றிச் சொல்கிறார். பூவுலகத்தில் இறைவன் வந்து, இறைவனின் திருவுருவம் பூர்த்தியாகி, மனிதன் இறைவனாகி, மனிதனுக்கடுத்த சத்தியஜீவன் பிறந்து சத்தியத்தின் ஆட்சி நிலவி, பொய்ம்மையும், இருளும், அறியாமையும், மரணமும் அழிந்து மனிதவாழ்வு தெய்வீக வாழ்வாக மாறவேண்டும் என பகவான் இறைவனைக் கேட்டார். அதை இறைவன் ஏற்றுக் கொண்டார். முதற்படியாக அதை நிறைவேற்ற இன்று உலகில் ஒரு சக்தியில்லாததால், சத்தியஜீவிய சக்தி அதைப் பூர்த்தி செய்யும் என்பதால், இறைவன் சத்திய ஜீவியத்தை உலகுக்கு அனுப்ப, - பொன்னொளியை அனுப்ப - பகவான் ஸ்ரீ அரவிந்தர் இறைவனானார், அன்னை இறைவனானார். பொன்னொளி பூவுலகத்தை எட்டியது. நின்று நிலவுகிறது. "மனிதன் அதிகபட்சம் பூவுலகுக்காக கேட்கக் கூடியதை, உச்சகட்ட தெய்வீக சக்தியை நாம் கேட்டோம்" என்கிறார் பகவான். இதுவரை ஆன்மா



விடுதலை பெறவேண்டும் எனக் கேட்டனர். பூமியில் நோய், மூப்பு, துயரம், பாவம் அழியவேண்டும் எனக் கேட்ட மகாபுருஷர்கள் உண்டு. அதற்குரிய சக்தி வரவேண்டும் என நினைக்கவில்லை. மனிதன் இறைவனை நாட வேண்டும், அடையவேண்டும் எனக் கேட்டனர். மனிதவாழ்வு துயரத்திலிருந்து விடுபடவேண்டும் எனக் கேட்டனர். பகவான், மனித வாழ்வு தெய்வீக வாழ்வாக வேண்டும் எனக் கேட்டார். அந்த வாழ்வு பூவுலகில் மலரும்பொழுது, இன்றுள்ள தெய்வீக வாழ்வைவிட சிறப்பானதாக இருக்கும் என்கிறார். தெய்வங்கள் சூட்சுமமானவை. நம்மைப் போன்ற உடலைப் பெற்றவையல்ல. உடலில்லாவிட்டால் **bliss** ஆனந்தம் பெறலாம், அதற்கடுத்த கட்டமான சிருஷ்டியின் ஆனந்தம்(**delight**) பெறமுடியாது. உயர்ந்த கீர்த்தனையை அறிவது, அதற்குரிய சாகித்தியத்தை அறிவது போன்றது **bliss** ஆனந்தம். அதைப் பாடுவது பாடி இன்பம் பெறுவது போன்றது **delight** சிருஷ்டியின் ஆனந்தம். உடலில்லாததால் கடைசி கட்ட ஆனந்தம் தெய்வலோகத்திற்கில்லை. அது உடலுள்ள மனிதனுக்குண்டு. அதைப் பெற அவன் இருளிலிருந்து விடுபட வேண்டும். இதைப் பெற்றுத் தர இறைவன் பகவானாகவும், அன்னையாகவும் மனிதனைத் தேடி வந்துள்ளனர்.

நிலத்தின் தன்மையறிந்து, அதில் விளையக் கூடியதை அறிந்து, அதைப் பயிரிட்டுப் பாதுகாத்தால், நிலம் மகிழ்ந்து அறுவடையாகப் பயன் தருவதுபோல் தெய்வங்கள் ஸ்தோத்திரத்தால் மகிழ்ந்து நாம் கேட்பதை கொடுப்பார்கள். கடையில் எல்லாம் விற்கிறது. பணம் கொடுத்து எதையும் வாங்கலாம் என்பது நம் நிலை. ஒரு பெரிய இடத்தில் உன்னை **chief guest** முக்கிய விருந்தினராக அழைத்தால், 100 வகைப் பலகாரம் செய்து வைத்திருந்தால், நம்மால் முடிந்த அளவு கொடுக்க அவர்கள் பிரியப்படுகின்றனர். தெய்வம் நிலம் போலவும், பிரம்மம் கடை போலவும், அன்னை விருந்தாகவும் செயல்படுகின்றனர்.

தொடரும்...

❊ ❊ ❊

# இம்மாதச் செய்தி

**காணிக்கைகளில் உயர்ந்தது தன்னையே முழுமையாக அர்ப்பணிப்பது. அதற்கடுத்த காணிக்கை பெறுபவரின் பெருநோக்கத்தைப் பூர்த்தி செய்வது, காணிக்கை தயாராகி விட்டது என்றாலும் அன்னை அதைப் பெற்றுக் கொள்வது ஓர் அதிர்ஷ்டம்.**

**உலகில் எந்தச் செயல் செய்தாலும் ஒரு வகையில் அது காணிக்கையாகிறது. கடையில் ஒரு பொருள் வாங்கினாலும் நம் செயல் அப்பொருளுக்குக் காணிக்கையாகிப் பின்னால் பெரும்பலன் அளிப்பதைக் காணலாம்.**

**"நானே நீயாகி, நீயே நானாகாமல் காணிக்கை கொடுக்கும் நிலை ஏன் எனக்கு அம்மா?"**

❊ ❊ ❊

## ஜீவிய மணி

ஒரு படி உயர ஒரு படி **(reversal)** தாழ வேண்டும்.





## "உலகமும், பிரபஞ்சமும்"

தத்துவம் நமக்கு உணர்த்துபவை பல,

* **உலகில் உள்ளது ஒரு மனம்.**
* **உயிர் என்பது உலகத்திற்கே ஒன்று.**
* **எல்லா உடல்களும் ஒன்றானவை.**

கடல் ஒன்றே. சென்னை, பாண்டி, வேதாரண்யம் ஆகிய இடங்களில் வெவ்வேறாகக் காணப்பட்டாலும் ஒரே கடலை நாம் பல ஊர்களில் காண்பதுபோல், பிரபஞ்சம் முழுவதும் ஓர் உடல் பரவியுள்ளது, அது நம் கண்ணுக்குத் தெரிவதில்லை, ஒவ்வொரு மனிதனைச் சுற்றியுமுள்ள உடலே தெரிகிறது என்பது ஆன்மீகத் தத்துவம். நம் பரம்பரையில் இக்கருத்தின் உண்மையைக் காட்டும் பல நிகழ்ச்சிகளுண்டு. பரமஹம்சரைப் பற்றிய இது போன்ற நிகழ்ச்சியை நான் அடிக்கடிக் குறிப்பிடுவேன். "மாலை நேர உரையாடல்கள்" என்ற நூலில் பகவான் கூறும் வேறு சில நிகழ்ச்சிகளும் உண்டு.

- தைலிங்க சுவாமி என்பவரைத் திருடர்கள் பிடித்து அடித்தனர். திருடன் வீட்டிற்குப் போனபொழுது அவன் மகன் மீது சுவாமிக்குப் பட்ட காயங்கள் இருந்தன.
- இதே நிகழ்ச்சியை நாம் வேறு வகையாகவும் கேள்விப்படுகிறோம். சுவாமி பல நாள் கங்கையில் மூழ்கியிருப்பதுண்டு. அது போன்ற நேரத்தில் அரசனும் ராணியும் நதிக்கரைக்கு வந்து திரையிட்டு ராணி குளித்தாள். சுவாமி நீரிலிருந்து வெளிவந்தவுடன்

அரசன் அவரை நையப் புடைத்தான். அரண்மனைக்குப் போனபொழுது ராஜகுமாரனுடைய உடல் காயமாக இருந்தது.

கதையின் உருவம் எதுவானாலும் ஒருவர் மீது பட்ட அடி அடுத்தவர் உடலில் விழுகிறது. இருவர் உடல்கட்கும் தொடர்புள்ளது.

- இரு செம்படவர்கள் சண்டையிட்டனர். பரமஹம்ஸர் நதி தீரத்திலிருந்த சமயம், செம்படவன் எதிரிக்குக் கொடுத்த அடிகள் பரமஹம்ஸர் உடலில் பட்டன என்பது 'ராமகிருஷ்ண கதாமித்ரா' வில் உள்ள செய்தி என சிஷ்யர் பகவானிடம் கூறினார்.

இக்கதைகளைக் கேட்ட பகவான் ஆமாம் இதுபோல் பல கதைகள் உண்டு. எது உண்மை, எது பொய்யென எப்படியறிய முடியும்? **Auto suggestion** நமக்கு நாமே சொல்பவை உடலில் பலிக்கும். செயின்ட் பிரான்சிஸ் உடலில் சிலுவையிலறைந்த வடுக்கள் இருந்தன. ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தம்மை ஹனுமானாகப் பாவித்தபொழுது ஒரு சிறு வால் வளர்ந்தது என்று கூறியுள்ளார். இவற்றை பகவான் மேற்கோளாகக் காட்டி விளக்கம் அளித்தார்.

❋ ❋ ❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

வெவ்வேறு தன்மையான மனிதர்கள் ஒரே ஸ்தாபனத்தில் வெவ்வேறு பலனுக்காக வேலை செய்தால், ஸ்தாபனம் தன் சக்திக்குக் குறைந்ததைச் சாதிக்கும். இப்படிப்பட்டவர் அதிகபட்ச சாதனை திட்டத்தின் குறைந்தபட்சமாகும்





## "தாசில்தார்"

சுமார் 12 ஆண்டுகட்கு முன் தாசில்தார் பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர். மீண்டும் வேலை இருந்தால் குடும்பத்திற்கு உதவியாக இருக்கும். இவருடன் ஓய்வு பெற்றவர் பெட்ரோல் பங்க்கில் 800/- ரூபாய் சம்பளத்தில் வேலையாக இருக்கின்றார். ஓய்வு பெறும்பொழுது தாசில்தார் பெற்ற சம்பளம் ரூ 2000/-

இவர் என்னுடைய நண்பர். 1950 முதல் நான் இவரை அறிவேன். நல்லவர், இனியவர், நேர்மையானவர். அன்னையின் சேவையில் ஆசிரியர் தொழிலிலிருந்து விலகி விவசாயம் செய்தபொழுது அனுபவம் சேவையாக இல்லை. மனிதனை நம்ப முடியாது என்பதே அனுபவம். ஒரு திட்டம் வியாபாரியின் ஏமாற்றுவித்தையால் தோற்றது. அடுத்த பெரிய திட்டம் கூட்டாளியின் துரோகத்தால் தோற்றது. எந்தப் பக்கம் திரும்பினாலும் இருட்டு. வாழ்க்கை நரகமாக இல்லை. வாழ்வேயில்லை என ஆயிற்று. அதனால் எல்லாம் அன்னை மீதுள்ள நம்பிக்கை போய்விட்டால், அதற்கு நம்பிக்கை என அர்த்தமில்லை என நானிருந்த நாட்கள். தினமும் பலர் என்னை சந்திப்பார்கள். நெருங்கிய நண்பர்கள் அவருள் பலர். ஒருவர் கூட எதையும் கண்டு கொள்வதில்லை. தாசில்தார் அடிக்கடி வருவார். வந்தவுடன், இது என்ன? எல்லோரும் துரோகம் செய்தால் நீங்கள் என்ன ஆவது? குடும்பம் என்ன ஆவது? எனப் பதைத்துக் கேட்பார். அப்படி என் வாழ்வில் அக்கரை கொண்டவர் தாசில்தார் மட்டுமே. இவருக்கு வேலை வேண்டும் என்பது என் ஆழ்ந்த விருப்பம்.

**Glass factory** முதலாளி ஒரு நாள் போன் செய்து தாசில்தார் விலாசம் கேட்டார். தாசில்தாரை பாக்டரியில் வேலைக்கமர்த்தப் போவதாகக் கூறினார். என்ன சம்பளம் தருவீர்கள் எனக் கேட்டேன். அவர் வாங்கிய 2000ரூபாய் தருகிறேன் என்றார். இன்று தாசில்தார் எனக்கெழுதிய கடிதம் :

“எனது 30 ஆண்டு சர்க்கார் ஊழியத்தில் பெற்ற வருமானம் போல் ஓய்வு பெற்றபின் 12 ஆண்டில் நான் சம்பளமாகவும், **P.F.** முதலியனவாகவும் பெற்றது இரு மடங்கு. இது அன்னையின் அருள்.”

“இன்று வந்த 35,000 செக்கைப் பற்றிய செய்தியொன்று. சென்ற மாதம் செக்கைப் பெற்று பாங்கில் கொடுத்தேன். பணம் வரவில்லை. பிறகு செக் தொலைந்ததாகச் சொன்னார்கள். **Duplicate** செக் பெற புது **procedure** உண்டு. ‘அன்னையை அனுப்புதல்’ நினைவுக்கு வந்து, தொலைந்து போன செக்கிற்கு அன்னையை அனுப்பினேன். மறுநாள் சென்னையிலிருந்து என் மகன் செக் கிடைத்துவிட்டதாகப் போனில் சொன்னான்”.

* ***ரிடையர் ஆனபின் வருமானம் பக்தர்கட்கு உயரும் என்பது தாசில்தார் விஷயத்தில் உண்மையாயிற்று.***
* ***அன்னையை அனுப்புதல் அவருக்குப் பலித்து ஆச்சரியம் கொடுத்தது.***

❊ ❊ ❊

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தெரிந்த விஷயம் முக்கியமான காரியத்தில் தெளிவாகும்பொழுது அதை மனம் அதிகமாக ஏற்றுக் கொள்கிறது. முதலில் அறிந்தது அறிவு ; இப்பொழுது அறிவது உணர்வு.



## அன்பர் கடிதம்

அன்னை அவர்களுக்கு,

அன்னையின் அருளும், ஆசியும் பூரணமாக உள்ளன. இதை நிரூபிக்க எனக்கு அன்னை கொடுத்த சந்தர்ப்பத்தை எழுதுகிறேன். நான் அன்னை பக்தைதான். எனக்கு மதரினால் நிறைய காரியங்கள் நடந்துள்ளன. இருந்தாலும் என்னிடம் உள்ள பிறவிக் குணங்கள் அவ்வப்போது தலை காட்டும். அதை முழுவதுமாக அகற்றவே மதர் எனக்கு ஒரு சோதனை கொடுத்து என்னை திருத்தினார். அதாவது நான் உங்களுக்கு எழுதிய கடிதத்தில் **pass book** தொலைந்த விதம் பற்றியும் அதை என்னால் ஞாபகம் வைத்துக்கொள்ள முடியவில்லை என்பதைப் பற்றியும் எழுதி இருந்தேன். உங்களிடமிருந்து பதில் வருவதற்குள் எங்கள் பாஸ்புக் கிடைத்துவிட்டது. அந்த அனுபவத்தை எழுதுகிறேன்.

நான் தினமும் காலையில் எழுந்து 5 **to** 5.30 மதரிடம் பிரார்த்தித்துக்கொள்ள ஆரம்பித்து உள்ளேன். அதில் என் பிரார்த்தனைகள், தியானமாகவும் உள்ளது. பாஸ்புக் தொலைந்தது பற்றி மதரிடம் தினம் **pray** செய்வேன். அதைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் ஒருவரைச் சந்தேகித்துக் கொண்டு இருந்தேன். அப்போது மதரிடம் இது தவறு, கண்ணால் பார்க்காமல் அவரைச் சந்தேகிப்பது தவறு என்றும், என்னை என் குணத்தை மாற்ற அருள் புரியுமாறு வேண்டிக்கொண்டேன். அந்த எண்ணம் வரும்போது எல்லாம் மதரிடம் சமர்ப்பித்தேன். அதற்கு என் மதர் நல்ல பலன் கொடுத்துவிட்டார். ஆம், நாங்கள் எப்போதோ மளிகை சாமான் வாங்கும் கடையில் வைத்துவிட்டு வந்ததை அந்தக் கடை முதலாளி கொண்டு வந்து வீட்டில் கொடுத்தார். அவர் சொன்ன வாக்கியம் என்னை நான் புரிந்துகொள்ள உதவியது. அதாவது இதைத் தினமும் பார்க்கும் போதெல்லாம் கடைப் பையனிடமும், இல்லை நானே வரவேண்டும், வந்து கொடுக்க வேண்டும் என்று நினைத்தபோது

வரமுடியவில்லை. காரணம் ஒரே வேலையாக இருந்தது என்றார். ஓர் உண்மை உள்ளது. அதற்கு பின் (பாஸ்புக் தொலைந்தது) பல முறை கடைக்குச் சென்று சாமான் வாங்கியபோது அதைப் பற்றி ஒன்றும் சொல்லாதவர் வீடு தேடி வந்து கொடுத்த அதிசயம் என் மனதை, என் குணத்தை முற்றிலும் மாற்ற மதர் எடுத்துக் கொண்ட **time** இது. நான் முழுமையாக மாறிய அன்றே எனக்கு அந்த பாஸ்புக்கைக் கையில் கிடைக்க வைத்தார். நான் முழுவதும் அன்னை பக்தையாக இருக்க அன்னை என்னை ஆசீர்வதிக்கிறார். அதனால் மதரிடம் பொய்யின்றி மெய்யாக பிரார்த்தனை செய்தால் தீராத பிரச்னை இல்லை என்பது உறுதி.

உங்கள் ஆசீர்வாதம் வேண்டும். இது நன்றிக் கடிதம்.

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உணர்வில் நாம் நிலைத்தால், அன்னை ஜீவியம், உலகிலுள்ள உயர்ந்த உணர்வுகளையெல்லாம் உற்பத்தி செய்யும். உணர்வே அன்னையை நாடினால் அவை நிரந்தரமாகும். நம் முழு ஜீவன் அன்னையை நாடி, சுவீகரிக்கப்பட வேண்டும் என்பதே நம் இலட்சியம். உணர்வில் நிலைப்பு முதல் நிலை.

*உணர்வில் ஆரம்பித்து அன்னையில் முடிக்கலாம்.*





## P. 23. On sustenance from occult spiritual founts

## சூட்சும ஆன்மீக ஊற்றின் ஆதரவு

நாம் சாப்பிடுகிறோம், தெம்பாக வேலை செய்கிறோம். தெம்பு சாப்பாட்டிலிருந்து வருவதாக நினைக்கிறோம். சாப்பாடு உடலுறுப்புகளைச் சுறுசுறுப்பாக்குகின்றது. சுறுசுறுப்பான உடல் உறுப்புகள் பிரபஞ்ச சக்தியுடன் தொடர்பு கொண்டு பிரபஞ்ச சக்தியை உள்ளே கொண்டு வருகின்றன. உடலை நடத்துவது சூட்சுமம் நிறைந்த பிரபஞ்ச சக்தி. இது நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. காரை ஸ்டார்ட் செய்ய பாட்டரியைப் பயன்படுத்துகிறோம். ஸ்டார்ட் ஆனபின் பெட்ரோலால் ஓடுகிறது. பாட்டரிக்கு ஸ்டார்ட் செய்வது மட்டுமே கடமை. சாப்பாட்டிற்கு உடலைச் சுறுசுறுப்பு ஆக்குவது மட்டுமே கடமை.

*நாம் காண்பது சாப்பாடு, பாட்டரி.*

*நம் கண்ணில் படாதது பிரபஞ்ச சக்தி, பெட்ரோல்.*

உலகில் இயங்குவனவெல்லாம் ஆன்மாவால். ஆன்மா என்ற ஊற்று கண்ணுக்குத் தெரியாமல் சூட்சுமமாகச் செயல்படுகிறது. நாம் பள்ளியில் படிக்கிறோம். புத்தகம் செலவு செய்து வாங்குகிறோம். பிள்ளைகள் படிக்க ஏராளமான செலவாகிறது என்கிறோம். சர்க்கார் ஆசிரியருக்குச் சம்பளம் கொடுக்கிறது. கட்டடம் கட்டுகிறது. நிர்வாகம் செய்கிறது. நம் செலவு சிறியது. அதுவே கண்ணுக்குத் தெரிகிறது.

குடும்பம் நடத்தப் பாடுபடுகிறோம். இடையறாது உழைக்கிறோம். ஏராளமான செலவு செய்கிறோம். சந்தோஷமாக வாழ்கிறோம். இந்த சந்தோஷ வாழ்வைப் பெற நாம் எடுத்த முயற்சி பெரியது. அது மட்டுமே நாம் அறிவது.

* அதன்பின் சர்க்கார் செய்யும் ஆயிரம் செலவுகளை நாம் அறியோம்.
* அதைவிடப் பெரிய ஆதரவைச் சமூகம் தருகிறது என்றால் நமக்குப் புரியாது. ஆனால் அது பெரியது.
* வாழ்வு சமூகத்தைவிடப் பெரியது. க்ஷணம் தவறாமல் வாழ்வு நம்மை வாழ வைக்கிறது.
* வாழ்வுக்குப் பின்னால் ஆன்மா உண்டு.
* ஆன்மாவின் சக்தி ஊற்றாக எழும்.
* அது நம் கண்ணுக்குத் தெரிவதில்லை.
* ஆன்மா சூட்சுமமாகச் செயல்படுவதால் தெரிவதில்லை.
* ஆன்மா சூட்சுமம் நிறைந்தது, சக்தி நிரம்பியது, நாம் அறிவது கைம்மண் அளவு.

❊ ❊ ❊

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஆர்வம் அதிகமானால் விலக்கப்பட்ட வேண்டியது அதிகமாகும். ஆர்வம் விலக்கப்பட வேண்டியதை விட அதிகமாக இருக்கும்வரை, தடையின்றிச் செயல்படும்.

*சுபாவத்தை மீறிய ஆர்வம் தடையின்றிச் சாதிக்கும்.*





## P. 11. நாத்திகம் ஆத்திகத்திற்குச் செய்த சேவை பெரியது

பத்தொன்பதாம் நூற்றாண்டில் உலகை மதம் ஆண்டது. ஓரளவுக்கு அரசர்களும் குருமார்கட்குக் கட்டுப்பட்டிருந்தனர். இதனால் மதத் தலைவர்கள் உலகெங்கும் அநியாயமாக நடக்க முயன்றனர். வேதம் அனைவரும் பயிலக் கூடாது, பைபிளை மக்கள் படிக்கக் கூடாது, ஆண்டவனை மனிதன் பாதிரி மூலமே அடையவேண்டும், என ஆரம்பித்து உற்பத்தி செய்த கொடுமைகளும் மூட நம்பிக்கைகளும் ஏராளம்.

* இன்றும் கம்ப்யூட்டர் சாத்தானுடைய கருவி என்று கூறுபவருண்டு.
* சந்திரனில் மனிதன் போயிறங்கியதை நம்ப மறுக்கும் B.A. படித்தவர் ஒருவர்.
* சோப்புப் போட்டுக் குளிப்பது அனாசாரம், துணியை சோப்புப் போட்டுத் துவைப்பது ஆசாரமில்லை என்று அழுக்கோடு வாழும் மனநிலை நடைமுறையில் உண்டு.
* சுத்தம் hygieneக்காக ஏற்பட்ட சட்டங்களை ஆன்மிகச் சட்டங்களாக்கி மூட நம்பிக்கை வாழ்கிறது.
* சமூகம் சுமுகமாக வாழ ஏற்பட்ட நியதிகளில் ஆண்டவனைக் கொண்டு வந்தது குருமார்கள் மற்றவர்களை அதிகாரம் செய்ய உதவியாயிற்று. அது மூட நம்பிக்கைக்கு அஸ்திவாரமாயிற்று.
* முதலாளி, குடும்பத்தலைவன், அரசன், படித்தவன், பணக்காரன் மற்றவர்களைத் தன் ஆட்சிக்கு உட்படுத்த ஆண்டவனைப் பயன்படுத்தியது ஏராளம்.
* பெற்றோர் தங்கள் அறியாமையைப் பிள்ளைகள் வாழ்வில் வலியுறுத்த ஆன்மீகம் கருவியாக இருந்து கொடுமைக்கு உதவி செய்தது.

* எந்த விதமான இயந்திரம் கண்டுபிடித்தாலும் சர்ச் அதை அடக்கியது. Steam engine நீராவி என்ஜின் 2ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டு சர்ச்சால் மறைக்கப்பட்டது.
* இன்றும் எந்தப் புதிய கருத்தையும் மனிதன் தானே நேரே ஏற்பதில்லை, முக்கியமானவர்கள் ஏற்றால் மனிதன் ஏற்பான். இது பகுத்தறிவில்லை, மூட நம்பிக்கை.
* 18ஆம் நூற்றாண்டு, 19ஆம் நூற்றாண்டுகளில் சுமார் 100 ஆண்டு காலம் ஐரோப்பாவில் குளிப்பது ஆரோக்கியத்தைப் பாதிக்கும் என்று நம்பினர். டாக்டர்கள் குளிப்பது சரியில்லை என்று கூறினர். பிறகு நிலைமை மாறியது.
  - இதுபோன்ற மூடநம்பிக்கைகள் இன்று ஏராளமாக உள்ளன.
  - நாம் அதை அழிக்க முன்வரவேண்டும்.
  - அதுபோன்ற சேவையை நாத்திகம் உலகுக்குச் செய்ததை நாம் அறிவோம்.
  - நாத்திகம் அக்காலத்தில் புரட்சிகரமான வேலையைச் செய்தது.
* எல்லாத் துறைகளிலும், எல்லா நேரங்களிலும் மூட நம்பிக்கைகள் வளர்கின்றன. அதை அழிப்பது சேவை.
* மூட நம்பிக்கை எந்த அளவிலிருந்தாலும் அன்னையை நெருங்க முடியாது.

❋ ❋ ❋



## புதுயுகமான புது வருஷம்

வருஷம் பிறக்கும்பொழுது நூற்றாண்டும் பிறப்பது விசேஷம். அத்துடன் ஆயிரம் ஆண்டு **millennium** பிறப்பது வரலாற்றில் முக்கியம். அது ஜனவரி 2000, 1ம் தேதியா, 2001, ஜனவரி முதல் தேதியா என்ற விவாதம் உலவுகிறது.

ஆன்மீகத் தத்துவப்படி எந்த நாளும், எந்த நேரமும், இறைவனுக்குரியது என்பதால் அனைத்தும் சிறப்பான நேரம், இருந்தும் இறைவன் வரும் தருணம் இது என்று பகவான் கூறியதை ‘ஆயிரம் ஆண்டுகளில் நடந்தேறுவது கணத்தில் நடக்கும் நேரம்’ எனவும் விவரித்தார். மந்தமான மனத்தின் மூலம் மகத்தான காவியம் எழுந்தது ஸ்ரீ அரவிந்த அன்பர்களுடைய அனுபவம்.

நம்மைப் போன்ற எளியவர் அறிவுக்கு, கண்ணுக்குப் புலப்படுவது ஏதேனும் உண்டா?

* இறக்கும் தருவாயில் காரணமின்றி உயிர் பிழைப்பது சத்தியஜீவிய சக்தி என்கிறார் அன்னை.
* வேலையில்லாத் திண்டாட்டம் என்று குரல் எழுப்பிய உலகம், வேலைக்கு ஆள் கிடைக்கவில்லை எனப் பதறுகிறது.
* பணம் பெருகுகிறது, தானே பெருகுகிறது, போகும் இடம் தெரியாமல் தவிக்கின்றது.
* ஒரு நாள் ஜீவிக்க முடியாத கம்பனிகள் ஒரு பத்தாண்டு உயிரோடிருக்கின்றன.
* உலகமே அழியப் போகிறது என்ற கூக்குரல் தானே மடிகிறது.
* பெண்ணுக்கு உரிமை வந்துவிட்டது. ஓட்டுரிமை, சொத்துரிமை, வேலை செய்யும் உரிமை, கணவனுக்குப் பின் பென்ஷன் பெறும் உரிமை, விவாகரத்து உரிமை என உரிமைகள் வந்துவிட்டன.

* வருஷத்தில் 10 கோடி நஷ்டப்படும் கம்பனிக்கு 4000 கோடி வருமானம் காத்திருப்பது தெரியவில்லை.
* ஒரு ஏக்கர் வாங்கிய விலைக்கு ஒரு சென்ட் வாங்க முடியாத அளவு விலை ஏறியுள்ளது.
* விலைவாசி ஏறிக் கொண்டேயிருக்கும்பொழுது, மனிதனுக்கு வசதியும் பெருகுகிறது.
* குடியிருந்த இடம் எல்லாம் கடையாக மாறிவிட்டது.
* பயிரிட்ட நிலமெல்லாம் குடியிருப்பாய் விட்டது.
* ஹைஸ்கூலில்லாத ஊருக்கு காலேஜ் வந்திருக்கிறது.
* லட்சாதிபதி என்ற சொல் மாறி கோடீஸ்வரன் என்று வழங்குகிறது.
* தெருவில் இட்டிலி சுட்டவள் மகன் கலெக்டராக இருக்கிறான்.
* 10 லட்சம் இந்தியர் அமெரிக்கா போய் மாதம் இலட்ச ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கிறார்கள்.
* 85 பைசா விற்ற பெட்ரோல் ரூ. 30 ஆன பின் கார் சைக்கிள் போல பெருத்துவிட்டது என்றால்,

**புது வருஷம் நமக்கு புதுயுகமல்லவா?**

அன்னை இவற்றைக் கண்ணுற்றார். பலவற்றைக் கூறியுள்ளார்.

* புவிஈர்ப்பு போன்ற சட்டங்களும் புதிய சக்திக்குப் பொருட்டன்று.
* பிறவியில் உள்ள புத்திசாலித்தனம் இனி வளரும்.
* பெரியது, சிறியது என்பதை இனி உலகம் கருதாது.
* தாழ்ந்தது உயர்ந்ததாகத் திருவுருமாறும்.
* வறுமையைப் பிடித்துக் கொண்டுள்ளவர்க்கு மட்டும் இனி வறுமையுண்டு.



* அகந்தையின் ஆயுள் முடிந்துவிட்டது.
* பேரருள் வருவதைப் பேச்சில்லாமல் ஏற்கும் எதிர்காலம் நிகழ்காலமாகும்.
* கர்மத்திற்கும் இனி வேலையில்லை, மனிதத் திறமைக்கும் தேவையில்லை.
* எதுவும் அவசியம் என்பது இனி இல்லை.

சூட்சுமப் பார்வையுள்ளவர்க்கு உலகில் புதுமை பொங்கி வருவது தெரியும்.

**நாமென்ன செய்யலாம்? நாம் என்ன செய்யமுடியும்? எப்படி இப்பொழுது இருக்கிறோம்?**

* சமூகம் நம் வாழ்வை நடத்தத் தயாராக இருக்கிறது.
* சமுத்திரம் நம் வாழ்வைச் சமுத்திரமாக மாற்ற விரும்புகிறது.
* அதைக் கடந்த நிலையில் அனைத்துப் பொறுப்பையும் ஏற்க அன்னை காத்திருக்கிறார்.
* நாம் குடும்பப் பொறுப்பை ஏற்கலாம்.
* மனதால் நாட்டின் பொறுப்பை ஏற்க விழையலாம்.
* முழுமூச்சுடன் முழுமையை நாடலாம்.
* முடிந்தவரை செய்து முடிக்கலாம்.
* பழையது பவுன் old is gold என்பதை மாற்றி பழையது போக வேண்டியது எனலாம்.
* நம் நாட்டின் பெருமையை உலகம் நாடும்பொழுது, உலகம் ஆமோதிக்கக் காத்திருக்காமல், நாமே அதை அறிந்து போற்றலாம்.
* வேத பாராயணத்தைக் கைவிட்டு வேதம் என்ன கூறுகிறது என்பதைப் பின்பற்றலாம்.

* சாங்கியத்தைத் தவிர்த்து சாஸ்திரத்தின் உட்பொருளை அறியலாம்.
* பிரம்மத்தை ஜடத்தில் கண்ட மேல் நாட்டார் நம்மைப்போல் 100 மடங்கு வளமாக இருக்கும்பொழுது பிரம்மத்தை ஆன்மாவில் கண்ட நமக்கு சொர்க்கம் காத்திருப்பதை அறியலாம்.
* சுத்தம் ஜடத்தின் சத்தியம் எனப் பின்பற்றலாம்.
* நேரம் செல்வம் என அறிந்து நேரத்தில் காரியத்தை நடத்தலாம்.
* ஒழுங்குக்கு உயிருண்டு என்பதால் ஒழுங்கைக் கடைப்பிடிக்கலாம்.
* எதைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் சத்தியத்தை மட்டும் கடைப்பிடித்து அன்னைக்குரிய செல்வத்தை 10 மடங்கு பெருக்கலாம்.
* கர்மம், கட்டுப்பட்டி, சாங்கியம், சாஸ்திரம், சம்பிரதாயம் உயிரிழந்தன என்று உணர்ந்து புது வருஷத்தில் புது வாழ்வை ஏற்கலாம்.
* நாளொரு பவுண்டும், பொழுதொரு கிலோவாக வளரும் இளைஞன் படிப்பது தவிர மற்றனவெல்லாம் கல்லூரியில் செய்வதைப்போல் நாம் இருக்கிறோம்.
* எல்லாத் தவறுகளையும் எல்லோரும் செய்யும்பொழுது நாடு மேலும் முன்னேறும் விந்தையை அறியலாம். அதன் மூலம் எது எனக் காணலாம். அம்மூலத்தை நம் வாழ்வில் செயல்பட அனுமதிக்கலாம்.
* 1970இல் எல்லா பாங்குகளிலும் ரூ. 4000 கோடியிருந்தது. இன்று நிலுவையான கடன் ரூ. 45,000 கோடி என்பது நாடு சீரழிகிறது என்பதைக் காட்டுவதுடன், நாட்டில் செல்வம் பெருகுவதையும் காட்டுகிறது என்பது நம் வாழ்விலும் உண்மை எனக் கண் திறந்து பார்க்கலாம், பார்த்து அதன்படி நடக்கலாம்.



* தன்னை Darcy விரும்புவதை அறியாத எலிசபெத் அவனைத் திட்டி அனுப்புவதைப்போல் நாம் நடக்கக் கூடாதல்லவா? பத்தாயிரம் பவுன் வருமானமுள்ளவன் ஐம்பது பவுன் வருமானமுள்ள பெண்ணைத் திட்டியபின்னும் நாடுவதுபோல் வாழ்வும், சரித்திரமும், அன்னையும் நம்மை நாடி வருவதை அறியலாம்.

50 வருஷத்திற்கு முன் பிழைப்பது கஷ்டம். படிப்பு என்பது இல்லை. படிப்பு கிடைப்பது அதிர்ஷ்டம். வேலை கிடைப்பது அதைவிடப் பெரிய அதிர்ஷ்டம். 100 ரூபாய் நோட்டை ஊரில் பார்த்தவர்கள் குறைவு. 25,000 ரூபாய்க்கு D/D வந்ததை ஜில்லா தலைநகரில் உள்ள பாங்கில் மாற்றப்போனால், பாங்கில் 25,000 இல்லை. வேறு பாங்கில் கடன் வாங்கித் தந்தனர். எந்த பாங்கிலும் அந்த அளவு பணமில்லை என்பதால் 4 பாங்கில் கடன் வாங்க வேண்டியதாய்ப் போயிற்று. ஒருவர் சென்னைக்குப் போயிருக்கிறார் என்றால், அது ஊர் முழுவதும் பரவும் செய்தி. 1975இல் பாண்டிச்சேரியிலிருந்து அமெரிக்காவுக்குப் போனில் பேச 3 மணி முதல் 2 நாள்வரை காத்திருக்க வேண்டும். பேசியதைப் பாண்டியிலுள்ள அமெரிக்கர்களே ஆச்சர்யமாகக் கேட்டுக் கொண்டனர். அன்று தினமும் ரூ. 80/- வியாபாரமான ஹோட்டலில் இன்று ரூ. 5000/- வியாபாரமாகிறது. உலகம் மாறிவிட்டது. எப்படி?

* 1967 முதல் உலகச் சர்க்கார்கள் எல்லாம் சத்திய ஜீவிய சக்தியில் செயல்படுவதாக பகவான் கூறுகிறார்.
* இன்று உலகச் சமுதாயமே அச்சக்தியின் ஆட்சியில் உள்ளது.
* மனிதனுக்கு முக்கியத்துவம் வந்துவிட்டது. மனிதன் அதை இன்னும் சரியாக அறியவில்லை.
* **Twentieth century was the century of common man. Twenty first century will be the century of the Individual.**

20ஆம் நூற்றாண்டு ஏழையின் நூற்றாண்டு. இருபத்தோராம் நூற்றாண்டு விடுதலை பெற்ற மனிதனின் நூற்றாண்டு எனக் கூறலாம்.

* இன்ஜினீயர் பட்டம் பெற்றவனுக்கு அமெரிக்காவில் வேலை காத்திருப்பது தெரியவில்லை. Software கம்பெனி ஆரம்பித்த இந்தியர் டெல்லியில் 4000கோடி சம்பாதித்த பின்னர் சாதாரண பட்டதாரிக்கு விவரம் தெரியவில்லை.
* கடைசி காலத்திலும் விவேகாநந்தருக்கு குரு மீது நம்பிக்கையில்லை. அவரே சமாதியானபின் ஸ்ரீ அரவிந்தருக்கு சத்திய ஜீவியத்தைக் காண்பித்தவர். இரண்டு நிலைகளும் உள்ளன. நாம் எதை நாடப் போகிறோம்?
* அறியாமை ஆண்டவனிடம் அறிவைவிட நெருக்கமாக உள்ளது என்கிறார் அன்னை. இன்றும் கையால் compose செய்து அச்சடிக்கும் letter press நாட்டில் ஏராளமாக உள்ளன.

பெரிய டெக்னாலஜி வந்துவிட்டது.

Letter pressஐ விடமுடியவில்லை.

* **இது புது வருஷம் மட்டுமன்று. புது யுகம்.**

* நாம் எதை நாடுகிறோம் என்பது நம் வாழ்வை நிர்ணயிக்கும்.
* எதையும் யாருக்கும் புரிய வைக்கலாம் என்ற ஆசை வேண்டாம் என்கிறார் அன்னை.
* நாம் நடப்பதை அறிய முடியுமா? அறிந்ததை ஏற்க முடியுமா?

*ஏற்றதைச் செயல்படுத்த முடியுமா?*

❊ ❊ ❊



**Agenda**

**Vol I P. 115** **To pass the test of Nature one needs cheerfulness and fearlessness.**

**To pass the test of Spirit one needs aspiration, confidence, idealism, enthusiasm, generosity and self giving.**

**To pass the test of hostile forces one needs vigilence, sincerity, humility.**

**Each progress has a test.**

**Some times we are examined and are the examiner.**

**எந்த வேலை செய்யவேண்டுமென்றாலும் அதற்கு ஒரு தகுதி வேண்டும் என்பதை அன்னை மேற்சொன்னவாறு கூறுகிறார்**

1. **இயற்கையிடம் நாம் ஜெயிக்க வேண்டுமென்றால், பயமில்லாமல், கலகலப்பாக இருக்கவேண்டும்.**
2. **ஆன்மா நம்மை ஏற்க வேண்டுமென்றால், ஆர்வம் (பக்தி), இலட்சியம், உறுதியான தெம்புள்ள நம்பிக்கை, உற்சாகம், தாராளம், அர்ப்பணம் தேவை.**
3. **தீயசக்திகளினின்று தப்ப, உஷார், உண்மை, அடக்கம் தேவை.**

**நாம் பல இடங்களில் பரீட்சிக்கப்படுகிறோம், சில இடங்களில் நாம் பிறரைப் பரீட்சிக்கிறோம்.**

ஏன் இப்படி அன்னை கூறுகிறார் என்பது நீண்ட விளக்கம். இயற்கை, ஆன்மா, தீயசக்திகளின் தன்மையை அறிந்தால் குறிப்பாகச் சில விஷயங்கள் புலப்படும்.

தீயசக்திகளுடைய முதற்கடமை மனிதனை இறைவனிடம் நெருங்கவிடாமல் தடுப்பது. தீயசக்திகள் சூட்சுமமானவை. நாம் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும், சூட்சுமமில்லாவிட்டால்

அவை அடித்துவிடும். 10,000ரூபாய் மகசூல் பெற்ற இடத்தில் 1 லட்சம், 1½ லட்சம் மகசூல் வரும் போலிருந்தால் பயிரிடுபவர் காவல் போடலாம், பூச்சி மருந்து அடிக்கலாம், இதுபோன்று அவர் செய்யக் கூடியவற்றை எல்லாம் செய்யலாம். எப்படி உஷாராக இருப்பது? காற்றில் சேதமாகும் பயிரானால் என்ன செய்யமுடியும்? தக்க சமயத்தில் கரண்ட் 10 நாளைக்கு வரவில்லை என்றால் என்ன செய்வது? இதுவரை இல்லாத பூச்சியை எப்படித் தடுப்பது? மனம் விழிப்பாக இருந்தால், இவற்றையும் தடுக்கலாம். மகசூலை எதிர்பார்ப்பது, வீண்பெருமை கொண்டாடுவது, கோபத்தில் தன்னை இழப்பது போன்றவைகளுக்கு இடம் தரவில்லை எனில் தீய சக்திகளிடமிருந்து தப்பலாம். அடக்கமிருந்தால் அவை நம்மைத் தீண்டா.

இயற்கை சக்தி பிரம்மாண்டமானது. அதனால் பயம் கூடாது. குதூகலமிருந்தால் பயம் ஒதுங்கும். ஆன்மாவுக்குத் தேவையானவை நம்மிலிருந்தால் ஆன்மா நம்மை ஏற்கும். பொதுவாக அன்னை 10,000 ரூபாய் வழக்கமான மகசூல் எனில் ஒரு லட்சம் தருவதில்லை. 10 லட்சம் தர முயல்வதால் 100 லட்சம் தன்னிடமிருந்து புறப்பட்டு எழுவதால், அவ்வளவு பெரிய வாய்ப்பை மனிதன் ஏற்கும் தகுதி தேவை.

நாம் பிறருக்கு எப்படிப் பரீட்சை வைக்கிறோம்? அன்னை நம் மூலம் ஒருவருக்கு அருள் செய்தால், அவர் நம் உறவில் தேறவேண்டும். ஸ்தாபனம் சிறியது. தலைவர் சேவை தமிழ்நாட்டிலில்லாத அளவு பெரியது. ஸ்தாபனத்தில் ஓர் உத்தியோகஸ்தர் அன்பர். அன்பரிடம் தலைவர் ஆதரவாக இருந்ததால் அவருக்குப் பெரிய உயர்வு வந்தது. பக்தருக்கும், தலைவருக்கும் அது தெரியாது, பெரியது எனில் நியூஸ் ரிப்போர்ட்டரை Editorial boardக்கு அனுப்புவது, உள்ளூர்ப் பாதிரியாரைப் பிஷப்பாக்குவது, MLA கூட இல்லாத தொண்டனை மந்திரியாக்குவது, உள்ளூர் வக்கீலை சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் ஆக்குவது போன்ற உயர்வு சிறு ஸ்தாபனத் தலைவரை நாடி வந்தது. 29 முறை வென்றார். 30ஆம் முறை தலைவர் அன்பரை தண்டித்தார். தண்டனை தலைவர் தலையை வெட்டியது. அன்பருக்கு ஆபத்தில்லை. இவர் போனார். புதிய தலைவருக்குப் பெரிய உயர்வு பலித்தது. அன்பர் தலைவருக்கு 'பரீட்சை' வைத்தார். தலைவர் தேறவில்லை.

❊ ❊ ❊



**Consultancy**

## "உத்தரவை ஏற்றுக் கொள்வது"

காலம் மாறுகிறது. அத்துடன் நேற்றைய முதலாளி இன்றைய தொழிலாளியாகும் நிலைகளும் உருவாகின்றன. அன்று கம்பெனி முதலாளி உத்தரவு வேதவாக்கு. தலைமேல் ஏற்றுச் செயல்பட்ட காலம் உண்டு. இன்று முதலாளி தன் கீழே வேலை செய்பவர்களை சேர்த்து 'என்ன செய்யலாம், உங்கள் இஷ்டப்படி செய்வோம்' என்ற நிலை பரவலாக எழுந்து நிலை பெற்றுள்ளது. காலம் மாறலாம், பழக்கம் மாறலாம், மாறாதவையும் உண்டு. அவற்றுள் ஒன்று

**அதிகாரி கூறுவது வேதவாக்கானால், காரியம் அற்புதமாக முடியும்.**

இது அன்னையின் கோட்பாடுகளில் ஒன்று. அன்னைக்கு அதிகாரி மட்டுமல்லர், எவரையும் மேலேயுள்ளவர், கீழேயுள்ளவர் - 'அதிகார பீடத்தில்' - இருப்பதாகக் கொண்டு வேலை செய்வது சரி. மனம் பணிந்தால், எவர்க்குப் பணிந்தாலும், பக்குவப்படும். அது பவித்திரம். அதிகாரியைவிட வேலை முக்கியம், வேலைக்குப் பணிவது சிறப்பு.

**Negativism** சொல்வதற்கு எதிராகச் செய்வது குழந்தைகளிடம் காணலாம். பெரியவர்கள் பல பேரிடம் காணலாம். 'அவனாகச் செய்தாலும் செய்வான், நான் சொன்னேன் என்று தெரிந்தால் நிச்சயம் செய்யமாட்டான்' என தமிழ்நாட்டு பாங்க் ஒன்றை நிறுவும் முதல் அதிகாரியாக இருந்தவர் தம் மகனைப் பற்றிக் கூறினார்.

முதலாளி - சிப்பந்தி, கணவன் - மனைவி உறவில் இந்த பழக்கம் வந்துவிட்டால் அது வேலைக்குத் தடை. எந்தச் சிப்பந்தி, எந்த வேலையில் எப்படி செயல்படுவார் என அறிவதே முக்கியம்.

கம்பெனியில் 17 சேல்ஸ்மென். எவரும் $ 40,000க்கு குறையாமல் - வருஷத்தில் - சம்பாதிக்கிறார்கள். அதிகபட்சம் $150,000

சம்பாதிக்கிறார்கள். இவர்கள் வேலைக்கு budget உண்டு, target உண்டு. இலக்கு இருந்தால் சுறுசுறுப்பாக வேலை நடக்கும். அப்படிக் குறிப்பிடாவிட்டால், வேலை மந்தமாகும்.

ஒரு மாதம் பெரும்பாலும் எல்லா சேல்ஸ்மேன்களும் இலக்கை எட்டிவிட்டனர். கடைசி 2 நாட்கள் உள்ளன. வியாபாரத்தில் இந்த 2 நாளில் பாதி சேல்ஸ் செய்வதும் உண்டு. $கூட வியாபாரமாகாததும் உண்டு. ஒரு சேல்ஸ்மெனுக்கு இலக்கு $ 5000 குறைகிறது. அவர் முதலாளியிடம் போய் தம் நிலையைச் சொல்லி ஏதாவது சொல்லுங்கள், நான் மறுக்காமல் அப்படியே ஏற்றுக்கொண்டு செய்கிறேன் என்றார்.

அவர் கேட்ட பாணியே அக்கடைக்குப் புதியது. முதலாளிக்கு அப்பொழுதே மனதில் சரி எனப்பட்டது. இவன் செய்வான் என நினைத்து 1 மணி நேரம் சுவாரஸ்யமாக அம்மாதம் முழுவதும் படித்துப் படித்துச் சொல்லியதை மீண்டும் ஒரு முறை கூறினார், பிரியமாக சேல்ஸ்மேன் கேட்டுக்கொண்டார். செய்வதாகப் பலமாகத் தலையை ஆட்டினார்.

கடை உள்ளே போனதும் வாடிக்கைக்காரர் ஒருவர் இவருக்காகக் காத்திருந்து சரியாக $ 5000க்கு வாங்கினார்.

சொல்வதை அப்படியே கேட்டுக் கொண்டால் தேவைப்பட்டதைப் போல் சரியாக அதே தொகை வரும் என்ற தம் அனுபவத்தை அன்னை கூறுகிறார். ஒரு நாள் அவருக்குத் தேவைப்பட்ட அதே தொகை செக்காக வந்தது என ஒரு முறை அன்னை கூறினார்.

❊ ❊ ❊





# புனர்ஜென்மம்

எஸ். அன்னபூரணி

‘குட்மார்னிங், அருணா எக்ஸ்போர்ட்ஸ்’ என்று இனிய ஆங்கிலத்தில் பேசியவாறு, வந்த தொலைபேசி அழைப்புகளுக்கு சுறுசுறுப்பாகப் பதில் சொல்லியவாறு இருந்தாள் ரேவதி. நகரிலேயே பிரசித்தி பெற்ற ஏற்றுமதி கம்பெனியின் மேனேஜிங் டைரக்டருக்கு அந்தரங்கக் காரியதரிசியாக உத்தியோகம். அவளைச் சுற்றி விதம் விதமான வண்ணங்களில் தொலைபேசிக் கருவிகள். பக்கத்திலேயே கம்ப்யூட்டர் ஒன்று கம்பீரமாக வீற்றிருந்தது. குளுகுளு செய்யப்பட்ட அறை, மெல்லிய இதமான வாசனை காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் அந்த அறையின் மூலையில் ஸ்ரீ அன்னை, பகவான் ஸ்ரீ அரவிந்தரின் படங்கள் வைக்கப்பட்டு சிறிய தட்டு ஒன்றில் பூக்கள் அடுக்கப்பட்ட விதம் நேர்த்தியாக இருந்தது. அது அலுவலகச் சூழ்நிலைக்கு ஒரு தெய்வீகத் தன்மையைக் கொடுத்தாற்போலிருந்தது. ரேவதி ஒவ்வொரு முறை தொலைபேசியை எடுக்கும்போதும் அன்னையை நோக்கி ஒரு புன்முறுவல் பூத்துவிட்டு வேலை செய்தாள். இடையிடையே கம்ப்யூட்டரையும் இயக்கிக் கொண்டிருந்தாள். கம்ப்யூட்டர் இயங்காதபோது அதன் திரையிலும் அன்னையின் திருவுருவப்படம் அவளை நோக்கிப் புன்முறுவல் பூத்தவாறு இருந்தது. அவர் படத்தருகில் தெய்வீக அன்பைக் குறிக்கும் விதமாய் மூன்று சிவப்பு ரோஜாக்களும் அன்னையுடன் சேர்ந்து ரேவதியை நோக்கி சிரித்தன. அது, அன்னை அவளை நோக்கி **‘I love you my dear child’** என்று சொல்வது போலிருந்தது. அவளும் நடுநடுவே மானசீகமாக **‘I too love you my dear Sweet Mother’** என்று அன்னைக்கு பதிலளித்துக் கொண்டிருந்தாள். **Work done in the true spirit is meditation** என்று அன்னை சொன்னதின் அர்த்தம் விளங்குவது போலிருந்தது. அன்னையை நினைக்க தனியாக நேரம் ஒதுக்குவதைவிட வேலை செய்யும்போதே இடையிடையே நினைத்துக் கொண்டாலே போதுமே எனத் தோன்றியது.

இவ்வளவிற்கும் நடுவே அவள் மனதில் ஒரு சின்ன விஷயம் நிரடிக் கொண்டிருந்தது. அன்று காலை அன்னை பக்தையும் அவளுடைய இனிய தோழியும் ஆனவள் மாம்பலம் தியான மையத்திற்கு வருகிறார். அவரைப் போய்ப் பார்க்க வேண்டும். அன்னையைப் பற்றிப் பேச வேண்டும் என்று ஆசை. ஆனால் பொறுப்பான உத்தியோகத்திலிருப்பதால் நினைத்தால் லீவு எடுக்க முடியாது. அம்மா என் ஆசையை நிறைவேற்றி வைப்பீர்களா? இதுவரைக்கும் நான் கேட்ட எதையும் நீங்கள் மறுத்ததில்லையே. நீங்கள் மனது வைத்தால் இது மட்டும் நடக்காதா என்ன என்று மனதுக்குள் பேசியவாறு வேலையைத் தொடர்ந்தாள்.

'ட்ட்டிரிங்' அவளுடைய **boss** அவளை அழைக்கும் மணியின் ஓசை கேட்டது. என்னவாக இருக்கும் என்று யோசித்தவாறு வழக்கம் போல் அன்னையை முன்னே அனுப்பிவிட்டு அவர் அறைக்குள் நுழைந்தாள்.

'மேடம் ரேவதி நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும். நம்முடைய "கஸ்டமர்" ஒருவரது கம்பெனி மாம்பலத்தில் உள்ளது. அங்கு சென்று இந்த பத்திரங்களைக் கொடுத்துவிட்டு வரவேண்டும். மிகவும் அவசரம். நம் கம்பெனி காரிலேயே சென்று வரலாம். அப்படியே உங்கள் மதிய உணவையும் முடித்துக் கொண்டு 3 மணிக்குள் திரும்பினால் போதும்'. கேட்ட ரேவதி வாயடைத்துப் போனாள். கரும்பு தின்னக் கூலியா? அம்மா, அம்மா என்னே உன் கருணை? நினைக்கும்போதே உடல் புல்லரித்துப் பரவசமாகிப் போய் கண்களில் நீர் குளம் கட்டியது. பதில் சொல்லாமல் நின்ற அவளைப் பார்த்து அவளுடைய மேலதிகாரி என்ன மேடம் உடம்பு சரியில்லையா? முடியவில்லையென்றால் பரவாயில்லை. வேறு ஏற்பாடு செய்து கொள்கிறேன் என்றார். உடனே ரேவதி திடுக்கிட்டுப் போய் **no sir,** எனக்குக் கூட மாம்பலத்தில் ஒரு சொந்த வேலை இருக்கிறது. உங்களிடம் **permission** கேட்க வேண்டுமென்று நினைத்தேன். பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் நீங்கள் இதைச் சொன்னதும் வந்த சந்தோஷத்தில் தடுமாறிவிட்டேன்.



'சொந்த வேலையா? அதையும் முடித்துக் கொண்டு வாருங்களேன். பத்திரத்தை ஒப்படைத்து விட்டால் அதற்கப்புறம் இன்றைக்கு வேறு முக்கிய வேலையில்லை. வரும் தொலைபேசி அழைப்புகளைக் கவனிக்க டெலிபோன் ஆபரேட்டர் தாரிணியிடம் சொல்லி விடுகிறேன்.'

அடுத்த அரைமணியில் அதிகாரி கொடுத்த வேலையை அன்னையின் அருளால் முடித்துவிட்டு தியான மையத்தில் தோழியிடம் பேசிக் கொண்டிருந்தாள் ரேவதி. நடந்த விஷயத்தை அவரிடம் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனாள். தோழியும் மெல்லிய புன்னகையுடன் தனக்கேயுரிய கம்பீரமான தொனியில் 'இதிலென்ன ஆச்சரியம் இருக்கிறது ரேவதி? **Miracle is made a common rule** என்று சாவித்திரியில் பகவான் சொல்லியிருக்கிறாரே. அன்னை என்று நமக்கு அறிமுகப்படுத்தப்பட்டாரோ, அன்றிலிருந்து நம் வாழ்வில் புது அத்தியாயம் தொடங்கிவிட்டது' என்றார்.

பேசிக் கொண்டேயிருந்தபோது ரேவதியின் முகத்தில் சிறு வாட்டம். கவலையுடன் 'மேடம் ஒரே ஒரு விஷயம்தான் என் மனதை மிகவும் வாட்டிக் கொண்டேயிருக்கிறது. அது என் தம்பியைப் பற்றிய விஷயம் தான்'.

'என்ன பிரச்னை? என்னிடம் சொல்லலாமென்றால் சொல்லேன்'.'அன்னையிடம் சொல்வதுபோல் நினைத்து உங்களிடம் சொல்கிறேன். எங்கள் வீட்டில் நாங்கள் எல்லோரும் அன்னையின் அருளால் நன்றாக ஆகி வளமான வாழ்க்கை வாழ்ந்து வருகிறோம். ஆனால் என் தம்பி ஒருவன் மட்டும் எதிலும் பற்றில்லாமல் திருமண வாழ்க்கையையும் வெறுத்து இருக்கிறான். அவனுக்கு ஒரு நல்ல எதிர்காலம் அமைய வேண்டும் என்பதுதான் எங்கள் கவலையெல்லாம். அவனும் என் அலுவலகத்தின் அருகிலேயே உள்ள ஒரு சர்க்கார் அலுவலகத்தில் அதிகாரியாகப் பணியாற்றுகிறான். அவன் யார் பேச்சையாவது கேட்பானென்றால் அவர் ஒரே ஒருவர் தான். அவனுக்கு அதிகாரியாக மீரா என்ற பெண்மணி இருக்கிறார். அவர் சொன்னால்தான் இவன் எதையும் கேட்பான். அவனுக்கு வாழ்க்கையில் பிடிப்பு ஏற்பட்டு ஒரு நல்ல எதிர்காலம் அமைந்துவிட்டால் எங்களுக்கெல்லாம் திருப்தியாயிருக்கும்'.

‘நீ அந்தப் பெண்மணியைப் பார்த்துப் பேசுவதுதானே’. ‘அவரை எனக்கு அதிகப் பழக்கமில்லை. ஓரிருமுறை அவருடன் பேசியிருக்கிறேன். மிகவும் நல்லவராகத் தெரிகிறார். ஆனால் எப்படி இந்த விஷயத்தைப் பேசுவது என்றுதான் தெரியவில்லை.’

‘கவலைப்படாதே. உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் கை கொடுத்த அன்னை இந்த விஷயத்தில் மட்டும் கை விடுவாரா என்ன? பொறுமையாக இரு. ஒரு நல்ல வழி கிடைக்கும்.’ தோழியுடன் பேசிய திருப்தியில் அலுவலகம் திரும்பினாள் ரேவதி.

மறுநாள் வழக்கம்போல் அன்னையை வணங்கி விட்டு வேலையைத் தொடங்கினாள். மாறி மாறி வந்த தொலைபேசி அழைப்புகளைக் கவனித்துவிட்டு சற்று ஓய்வு கிடைத்தபோது கைகளைச் சொடுக்கிக் கொண்டு தலை நிமிர்ந்தவளின் கண்களில் திகைப்பு,

மீரா, தம்பியின் **God Mother.**

‘வாங்க மேடம்’ மரியாதையுடன் எழுந்து வரவேற்றாள். ஆனால் வந்தவரின் முகவாட்டம் அவளை திடுக்கிட வைத்தது. ஏதோ சரியில்லை என்று அவள் உள்ளுணர்வு கூறியது. தயங்கியவாறு பேசினார் வந்த பெண்மணி,

‘ரேவதி மனதைத் திடப்படுத்திக் கொண்டு நான் வந்த விஷயத்தைக் கேளம்மா. எங்கள் அலுவலகத்துக்குச் சிறிது நேரத்திற்கு முன் ஒரு போன் கால் வந்தது. அதில் உன் தம்பி ரவியின் பெயரையும் விலாசத்தையும் சொல்லி, ஒருவர் விபத்தில் இறந்துவிட்டார், அவரது பர்ஸில் இந்த அடையாள அட்டையும் விலாசமும் இருந்தது என்று சொன்னார். கேட்ட அதிர்ச்சியில் எங்களுக்கு ஒன்றுமே ஓடவில்லை. திடீரென்று உன் நினைவு வந்தது. விஷயத்தை உன்னிடம் சொல்ல ஓடி வந்தேன்.’ தாங்கொணாத துயருடன் சொல்லி முடித்தார். கேட்ட ரேவதி ஒரு கணம் ஆடிப்போனாலும், அடுத்த நொடியே கம்ப்யூட்டரில் தெரிந்த அன்னையின் புன்னகை தவழும் திருமுகத்தைப் பார்த்தாள். ‘இல்லை, இருக்கவே இருக்காது. அன்னை உள்ள இடத்தில் இப்படி



நடக்க சந்தர்ப்பமே ஏற்படாது.’ சட்டென்று இருக்கையை விட்டு எழுந்து அன்னை படத்தருகே வைத்த பூவில் ‘மரணமில்லாப் பெருவாழ்வை’க் குறிக்கும் வாடாமல்லிப்பூவைத் தேடினாள். கிடைக்கவில்லை. இருப்பினும் மனம் தளராமல் முந்தைய நாளின் புஷ்பப் பிரசாதத்தைக் கிளறி அதிலிருந்து ஒரு வாடாமல்லிப்பூவை எடுத்து தலையில் சொருகிக் கொண்டாள். கேட்ட விஷயத்தை அன்னைக்குச் சமர்ப்பணம் செய்து அமைதியாக அந்த அம்மையாரை நோக்கினாள். இவளுடைய நிதானம் அந்தப் பெண்மணிக்கு வியப்பை அளித்தது. எவ்வளவு பெரிய விஷயத்தைச் சொல்லியிருக்கிறோம், பதட்டமே இல்லையே என்று நினைத்த உடனேயே அவள் எண்ணத்தைப் புரிந்து கொண்டதுபோல், ‘மேடம், நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது. இதோ இந்த அன்னையின் பக்தை நான். இவருடைய பக்தர்களுக்கு இந்த மாதிரி நிலைமை வரவே வராது. நீங்கள் போனில்தானே விஷயத்தைக் கேட்டீர்கள் நேரில் யாரும் போய்ப் பார்க்கவில்லையே. வாருங்கள் நானும் உங்கள் அலுவலகத்துக்கு வருகிறேன். மேற்கொண்டு விபத்தைப் பற்றிய விபரம் அறிந்து வரலாம்’ என்று சொல்லி அவருடன் கிளம்பினாள். வந்த பெண்மணிக்கோ ஒரே ஆச்சரியம். எப்படித் தன்னை விட வயதில் சிறியவளான இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு தன்னம்பிக்கையும், துணிச்சலும் ஏற்பட்டது? இந்த நம்பிக்கையை இவளுக்கு ஏற்படுத்திய இந்தப் படத்தில் புன்னகைக்கும் இந்த தெய்வம் யார்? என்று மனதில் கேள்விகளை எழுப்பியவாறே அடுத்த காம்பவுண்டிலுள்ள தம் அலுவலகத்துக்குக் கிளம்பினார்.

இருவரும் அங்கே சென்றவுடன், கும்பல் கும்பலாக நின்று இந்த விஷயத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்த ஊழியர்கள் அனைவரும் சத்தம் அடங்கி இரக்கத்துடன் ரேவதியையே பார்த்தனர். ஆனால் ரேவதியோ சிறிதும் கலங்காமல் ‘போன் யாருக்கு வந்தது? என்ன விபரம்? விபத்து எங்கு நடந்தது? யார் போய்ப் பார்த்தார்கள்? அது ரவிதான் என்று உறுதி செய்து கொண்டீர்களா?’ என்று கேள்வி மேல் கேள்வி கேட்க ஆரம்பித்தவுடன் அனைவரும் அசந்து போனார்கள். ஒரு வழியாக விபரத்தைச் சேகரித்துக் கொண்டு விபத்து நடந்த இடத்திற்குக் கிளம்பலாம் என்றபோதுதான் அந்த ஆச்சரியம் நடந்தது.

அலுவலக வாயிலில் ஓர் ஆட்டோ வந்து நின்றது. அதிலிருந்து சோர்ந்த கண்களும், களைத்த முகமுமாக ரவி இறங்கி வந்து ‘என்ன இங்கே ஒரே கூட்டம்? ரேவதி என்ன இது, நீ ஏன் என் அலுவலகத்துக்கு வந்தாய்? என்ன விஷயம்? என்று கேட்டுவிட்டு அவளது பதிலைக் கூட எதிர்பார்க்காமல் மீராவிடம் திரும்பி மேடம், ஒரு முப்பது ரூபாய் கொடுங்கள் ஆட்டோவுக்குக் கொடுக்க வேண்டும்’ என்று பணத்தை வாங்கி ஆட்டோவுக்குக் கொடுத்துவிட்டு உள்ளே நுழைந்தான். அலுவலக ஊழியர்களின் உணர்ச்சிகளை விவரிக்க வார்த்தைகளில்லை. மீரா மேடமோ, ரேவதியை ஒருவித புது மதிப்புடன் பார்த்தார். அவரது கண்களில் ஒருவித நெகிழ்ச்சி. எல்லோரும் ரவியைச் சூழ்ந்து கொண்டு கேள்விமேல் கேள்வி கேட்க ஆரம்பித்தபோது நடந்ததை ரவி விவரிக்க ஆரம்பித்தான்.

இன்று வீட்டிலிருந்து அலுவலகம் கிளம்பவே தாமதமாகிவிட்டது. அவசரம் அவசரமாகக் கூட்டமாக இருந்த பஸ்ஸில் இடம் பிடித்து புட்போர்ட்டில் தொங்கிக் கொண்டு வந்தேன். பஸ் சிக்னலில் நிற்கும் போது சட்டென்று ஒருவன் என் பர்ஸை பிக்பாக்கெட் அடித்துக் கொண்டு ஓடிவிட்டான். அவனைப் பிடிக்க முடியாமல் போய்விட்டது. அதில் அலுவலக அடையாள அட்டை இருந்தது. போலீஸில் புகார் கொடுத்தால் தான் **duplicate card** கிடைக்குமென்பதால் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனேன். அவர்கள் என் புகாரைப் பதிவு செய்ய மறுத்து வேறொரு போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பினார்கள். அங்குமிங்கும் அலைந்து ஒரு வழியாகப் புகாரைப் பதிவு செய்துவிட்டுக் கையில் காசில்லாததால் ஓர் ஆட்டோ பிடித்து இங்கு வந்து சேர்ந்தேன். போலீஸ் ஸ்டேஷனில் அதிக நேரம் காக்க வைத்துவிட்டதால் போன் செய்யக்கூட நேரமில்லாமல் போய்விட்டது.

எல்லோருக்கும் இப்பொழுது உள்ளங்கை நெல்லிக்கனியாக விஷயம் விளங்கிவிட்டது. விபத்துக்குள்ளானது ரவியல்லன். ரவியின் பர்ஸைத் திருடிக் கொண்டு போன ஆள்தான் என்று புரிந்துகொண்டனர்.

இதற்குள் ரேவதி மிகுந்த உணர்ச்சிப் பெருக்கில் தொண்டையடைக்க ரவியின் புறங்கையில் பரிவுடனும், பாசத்துடனும்



ஒரு முத்தத்தைப் பதித்துவிட்டுத் தன் அலுவலக அறைக்குத் திரும்பி அன்னையின் படத்தின் முன்பு மண்டியிட்டுக் கண்ணீர் மல்க நன்றிப் பெருக்குடன் கதறினாள். ‘அம்மா, அம்மா’ என்று அவள் நா தழுதழுத்தது. சட்டென்று அவள் தோளில் யாரோ கை வைப்பதை உணர்ந்து திரும்பினாள். மீரா அம்மையார் அவரும் அவளருகில் மண்டியிட்டு ‘ரேவதி நிஜமாகவே இவர் அற்புதமான தெய்வம்தான். இவரை எனக்கும் அறிமுகப்படுத்துவாயா?’ என்று இறைஞ்சினார். அவரது கைகளைப் பரிவுடன் பற்றிய ரேவதி அதற்கென்ன மேடம், அதைவிடப் பெரிய பாக்கியம் என்ன இருக்கிறது? அன்னையை ஒருவருக்கு அறிமுகப்படுத்துவது ஆத்மாவிற்குச் செய்யும் சேவை என்று படித்திருக்கிறேன் என்றாள்.

இது நடந்த ஒரு வாரம் கழித்து ரேவதிக்கு அம்மாவிடமிருந்து போன் வந்தது. ரேவதி இந்த ஆச்சரியத்தைக் கேட்டாயா? ரவி இப்பொழுதெல்லாம் அலுவலகம் கிளம்பு முன்பு அன்னைக்கு நமஸ்காரம் செய்துவிட்டுத்தான் போகிறான். பர்ஸில் **blessing packet** வைத்திருக்கின்றான். கேட்டால் மீரா மேடம் சொல்லிட்டாங்க. நிச்சயம் அன்னை மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம். மீரா ரேவதியை எப்படி புகழ்கிறார் தெரியுமா? என்கிறான். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. எப்பொழுது அவன் அன்னையிடம் வந்துவிட்டானோ இனிமேல் அவன் எதிர்காலத்தைப் பற்றிய பிரச்னை எனக்கில்லை. என் தோளிலிருந்து மிகப் பெரிய பாரத்தை இறக்கி வைத்தாற்போலிருக்கிறது. உனக்குத்தான் இந்தப் பெருமையெல்லாம்.

அம்மா பேசி போனை வைத்தவுடன் ரேவதி ஒருவித மனநிறைவுடன் அன்னையின் படத்தைப் பார்த்து ‘அம்மா இந்தப் புகழ்ச்சி பெருமைகளெல்லாம் உன்னைச் சேர்ந்தது. அதை உனக்கு அர்ப்பணிக்கிறேன், ஏற்றுக்கொள்’ என்று சொல்லிவிட்டு அமைதியான மனத்துடன் வேலையைத் துவக்கினாள்.

❊ ❊ ❊

## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

அண்ணன் – நான் அதிகம் படித்ததில்லை. சில கதைகள் படித்திருக்கிறேன். அவற்றை நீ சொல்லியதுபோல் புரிந்து கொண்டிருக்கிறேன். 200 வருஷத்திற்கு முன் எழுதிய ஆங்கில நாவல் அது. ஒரு தனவந்தருக்கு 5 பெண்கள். அவர் வருமானம் ஆண்டுக்கு £ 2000 பவுன். ஆனால் அவர் வாழ்நாளுக்குப் பின் அந்தச் சொத்து பெண்களுக்கில்லை. அவர்கள் நாட்டில் பெண்கள் தாங்களே வரன் தேடிக் கொள்ளவேண்டும். முதல் பெண் சாது. அடுத்தவள் அக்காபோல் அழகியல்லள். ஆனால் தெளிவாகப் பரவசமாக இருப்பவள். அடுத்த 3 பேரும் வெறும் பெண்கள். தங்கள் நிலை அறியாதவர்கள். பெரிய பெண்கள் இருவரும் நிதானமானவர்கள். அவர்கள் ஊருக்கு இரு பெரிய தனவந்தர்கள் குடும்பத்துடன் வருகிறார்கள். ஒருவருடைய வருமானம் £ 4000, அடுத்தவர் மிகப் பெரிய செல்வர், வருமானம் £ 10,000, இருவரும் திருமணமாகாதவர். இவர்கள் உள்ளூர் தனவந்தர் குடும்பத்தைச் சந்திக்கின்றார்கள். மூத்த பெண்ணை ஒருவர் விரும்புகிறார். திருமணம் நிச்சயம் என்ற அபிப்பிராயம் பரவுகிறது. விரும்புகிறவரும் சாது. பெரிய செல்வர், உள்ளூர் தனவந்தரை மட்டமாக நினைக்கிறார். அவருக்கு இரண்டாம் பெண் மீது தன்னை மீறிய பிரியம் எழுகிறது. அவரை அனைவரும் கர்வி என்கிறார்கள். இரண்டாம் பெண்ணுக்கும் அவரைக் கண்டாலே கசப்பு. தன்னை அளவுகடந்து விரும்புபவர் மீது வெறுப்பு. விருப்பம் அளவு கடந்திருந்தாலும் அவர் நடைமுறை அவள் மனதைப் புண்படுத்துகிறது. அதை விளக்க முயன்றவர் அவளை இழித்துப் பேசுகிறார்.



எதிர்பார்த்த திருமணம் நடைபெறவில்லை. வந்த தனவந்தர்கள் போய்விட்டனர். இரண்டாம் பெண்ணுக்கு தன் தமக்கை திருமணத்திற்கு தடை கர்விதான் என்று புரிகிறது. அவர்கள் ஊருக்கு இராணுவம் முகாமிட வருகிறது. ஆபீசர்கள் உள்ளூரில் எல்லோரிடமும் கலந்து பழகுகின்றனர். தனவந்தரின் கடைசி மூன்று பெண்களும் ஆபீசர்களுடன் பார்ட்டி, நடனம் என பலமுறை கலந்து கொள்கின்றனர். அவருள் ஓர் அழகன். இனிமை நிறைந்தவன். அனைவரும் அவனை விரும்புகின்றனர். அவன் தனவந்தர் வீட்டிற்கு வருகிறான். இரண்டாம் பெண்ணைச் சந்திக்கிறான். அவளுக்கு அவன் முகம் மனம் நிறைந்ததாக இருக்கிறது. அவன் கர்வியின் பால்ய நண்பன், தனக்குக் கர்வி செய்த துரோகத்தைக் கூறுகிறான். பெண் மனம் இரணமாயிற்று.

இரண்டாம் பெண் உறவினர் ஊருக்குப் போகிறாள், தற்செயலாய் கர்வியைச் சந்திக்கிறாள். இனிமையாகப் பேச முயல்கிறாள். பேச்சு கடுமையாக வருகிறது. அடுத்த நாள் கர்வி அவளைப் பார்த்து தன்னை மணக்கும்படிக் கேட்கிறான். ‘உன் போன்றவரை என்னால் ஏற்க முடியாது’ எனக் கோபமாக மறுக்கிறாள். அவன் செல்வம் அவள் கண்ணுக்குத் தெரியவில்லை. அழகன் உருவம் மனதைத் தொடர்ந்து நிரப்புகிறது. பெண் அழகாகப் பழகினாலும், மனதிலுள்ளதை அவரிடம் கொட்டினாள். ‘என் தமக்கை திருமணத்தை தடை செய்தாய். நண்பனுக்குத் தீங்கிழைத்தாய்’ என்கிறாள்.

மறுநாள் கர்வி நீண்ட கடிதம் எழுதி அவளிடம் தருகிறான். திருமணத்தைத் தானே தடை செய்தது உண்மை. தாழ்ந்தது உன் குடும்பம். தடுப்பது என் கடமை. நண்பன் தவறானவன். அவன் கூறியது பொய்.

என் தங்கையை கடத்த முயன்றான் என்று கடிதம் கூறுகிறது.

அவள் அத்தை, கர்வி ஊரில் குடியிருந்தவள். அவ்வூர் வழியாகப் பிரயாணம் செய்ய இரண்டாம் பெண்ணை அழைக்கிறார். கர்வி ஊருக்கு வந்ததும் கர்வியின் வீடு அரண்மனை போலிருப்பதால் அனைவரும் பார்க்கும் இடமானதால் பெண்ணை அழைக்கிறார். கர்வி ஊரிலில்லை எனத் தெரிந்து போய் பார்த்துத் திரும்பும்போது வழியில் அவனைக் காண்கிறாள். அவன் மிருதுவாகப் பேசுகிறான். உபசாரம் செய்கிறான். தன் தங்கையை வந்து பார்க்கும்படி அழைக்கிறான். மறுத்துவிட்டாள். ஹோட்டலுக்கு வருகிறான். தன் தங்கையை அழைத்து வந்து கர்வி பெண்ணுக்கு அறிமுகப்படுத்துகிறான்.

அதே சமயம் தன் ஊரில் அழகன் தங்கையுடன் பழகி அவளைக் கடத்திப் போகிறான். செய்தி பெண்ணுக்கு ஹோட்டலில் கிடைக்கிறது. பதறிப் போகிறாள். இனி 5 பெண்கள் வாழ்வும் அழிந்துவிட்டது. அந்த நேரம் கர்வி வருகிறான். தன் கர்வத்தை மறந்து தனக்குக் கர்வியின் நண்பன் செய்ததைக் கூறுகிறாள். அவசரமாக ஊர் திரும்புகிறாள். அத்தையும், மாமாவும் லண்டனுக்குப் போய் காணாமல் போனவளைத் தேடுகிறார்கள். கண்டுபிடித்து அழகனை மணக்கச் சொன்னால் மறுத்து பணம் கேட்கிறான். £ 10,000 பேரம் முடிகிறது. மணம் முடிகிறது. ஓடிப்போன பெண் கணவனுடன் வீடு திரும்புகிறாள். தம் கல்யாணத்திற்கு கர்வி வந்ததாகக் கூறுகிறாள். அதன் மூலம் கர்வி தான் ஓடிப் போனவளைக் கண்டுபிடித்ததாகவும், பெருந்தொகை கொடுத்து அழகனைச் சமாதானப்படுத்தி பெரிய வேலை வாங்கிக் கொடுத்ததாகவும் இரண்டாம் பெண் அறிகிறாள். சாதுவும், கர்வியும் மீண்டும் பெண்ணின் ஊருக்கு வருகிறார்கள். சாது மூத்த



பெண்ணை மணக்கிறான். கர்வி இரண்டாம் பெண்ணை மணக்கிறான், என்பது கதையின் சுருக்கம்.

தம்பி - எப்படிப்பட்ட குடும்பத்தில் எவ்வளவு அவமானம் நேர்ந்தது. எப்படியோ நல்லபடியாக முடிந்தது.

அண்ணன் - இக்கதையில் ஸ்ரீ அரவிந்தர் கருத்துப்படி நானறிந்தவை,

1) பெரிய துர்ப்பாக்கியம் என நாம் கருதுவதே, அக்குடும்பத்திற்கு அதிர்ஷ்டம்.

2) இரண்டாம் பெண் தறுதலையான அழகனை மனம் உவந்து விரும்பியதால் அழகன் அவர்கள் குடும்பத்திற்குத் தீங்கு செய்ய முடிந்தது.

3) அவ்வளவு பெரிய அவமானத்தைத் தன் குடும்பத்திற்குக் கொண்டுவந்தது தறுதலை என்றாலும், பெண்ணின் அறிவு அவன் தவற்றை அறிகிறதே தவிர, அவள் மனம் அவனைக் குறை கூறவில்லை. தொடர்ந்து விரும்புகிறது.

தம்பி - தலைகீழாக இருக்கிறதே நீங்கள் கூறுவதெல்லாம்?

அண்ணன் - பெரிய பெண்ணும், அவள் கணவனும் சாது. அங்கு உயிரில்லை, உயிர்ப்பு இரண்டாம் பெண்ணிடம் இருக்கிறது. மனம் தறுதலையான அழகனை நாடுகிறது. உயிர்ப்புள்ள பெண் தன் மனதை அவனிடம் கொடுத்ததால், அவனால் தவறு செய்ய முடிகிறது. ஓடிப்போன பெண்ணிடம் எந்த நல்லதும் இல்லை. உடல் உறுதியுள்ளது. உடல் உறுதியில் சக்தியுள்ளது. அந்த சக்தி தவறாகச் செயல்பட்டு பெரிய நல்லதைக் கொண்டு வருகிறது. அதனால் அவளே அக்குடும்பத்திற்கு அதிர்ஷ்டம் கொண்டுவந்தவள். இதுவே எனக்குப் புரிந்தது, எவரும் ஏற்கமாட்டார்கள் என நான் அறிவேன்.

தம்பி - எதுவும் விளங்கவில்லை.

## **“Pride and Prejudice”**

# **“கர்வம், தப்பபிப்பிராயம்”**

*(சுமார் 200 ஆண்டுகட்கு முன் ஜேன் ஆஸ்டின் என்ற பெண் எழுதிய ஆங்கில நாவல். பணம் படைத்தவருடைய கர்வமும், அவரைத் தவறாகப் புரிந்து கொண்ட பெண்ணின் அபிப்பிராயமும் மோதுவதே கதை. பணமில்லாத அப்பெண் மீது அவருக்கு ஏற்பட்ட பிரியம் முடிவில் நிறைவேறியதைக் கருவாகக் கொண்ட கதை. நாட்டில் சமூக அமைப்பு மாறுவதைப் படம் பிடிப்பதால் இது மேலும் முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. 44ஆம் பக்கத்தில் சுருக்கமாக எழுதியதின் விளக்கம்.)*

**Mr.** பென்னட்டிற்கு ஜேன், எலிசபெத், மேரி, கிட்டி, லிடியா என 4 பெண்கள். அவர் லாங்பர்ன் என்ற கிராமத்தில் வசிக்கிறார். அவ்வூருக்கு நெதர் பீல்ட் என்ற இடத்திற்கு பிங்லி, டார்சி என இரு செல்வர்கள் 5, 6 பெண்களுடன் வருகிறார்கள். ஊரில் உள்ள பலரும், இந்த 5 பெண்களும் பிங்லி வீட்டு நடனத்திற்கு வருகிறார்கள். நடனமாடும்பொழுது பிங்லியும், ஜேனும் நெருங்கி வருவதால் அவர்கள் திருமணம் செய்து கொள்வார்கள் என்று பேசுகிறார்கள். எலிசபெத்துடன் நடனமாட டார்சி மறுத்ததால் அவளுக்கு கோபம் வருகிறது. டார்சிக்கு எலிசபெத்தின் மீது தம்மை மீறிய பிரியம் கட்டு மீறி எழுகிறது. தொடர்ந்திருந்தால் பிங்லிக்கும் ஜேனுக்கும் திருமணமாகும் என்பதால் அதைத் தவிர்க்க டார்சி அவ்வூரை விட்டுப் போக ஏற்பாடு செய்கிறார், புதியதாக வந்தவர்கள் அனைவரும் போய்விட்டனர்.

அவ்வூருக்குப் பக்கத்தில் இராணுவ முகாம் வருகிறது. அங்குள்ள ஆபீசர்கள் ஊரில் பலருடனும் நெருங்கிப் பழகுகிறார்கள். எல்லா வீடுகட்கும் விருந்திற்கு வருகிறார்கள். அவர்களுள் விக்காம் என்பவர் மிக அழகானவர். அழகாகப் பழகுபவர். எலிசபெத்திற்கு அவர் பழக்கம். அவர் டார்சியின் பால்ய நண்பன். தம் வாழ்வைக் கெடுத்தவர் டார்சி, தமக்கு சேர வேண்டியதை மறுத்தவர் என்று எலிசபெத்திடம் கூறுகிறார். எலிசபெத்திற்கு அவருடைய அழகு மனதை மயக்குகிறது.

பென்னட்டிற்குப் பிறகு அவர் எஸ்டேட் காலின்ஸ் என்பவர்க்குப் போகும். அவர் எலிசபெத்தை மணக்க விரும்புகிறார். தாயார் பிரியப்படுகிறார். பெண் மறுத்துவிடுகிறார். சார்லோட் என்பவர் 27 வயதான பெண். சர் பட்டம் வாங்கியவர் மகள். பணமில்லை. காலின்ஸ் அவரை மணக்கிறார். டார்சியின் சின்னம்மா பெரிய பணக்காரி. அவளுடைய ஆதரவில் காலின்ஸ் பாதிரியாராக கெண்ட் என்ற இடத்திலிருக்கிறார். எலிசபெத் சார்லோட்டுடன் கெண்ட்டிலிருக்கும் பொழுது டார்சி சின்னம்மாவைப் பார்க்க வருகிறார். எலிசபெத்தை சந்தித்து தன்னை மணக்க வேண்டும் என்கிறார். அவள் கோபமாக, என் தமக்கை திருமணத்தை தடை செய்தாய், விக்காமிக்கு அநியாயம் செய்தாய். நான் எப்படி உன்னை மணக்க முடியும்? என்று மறுக்கிறாள்.

பதில் சொல்ல முடியாமல் திணறும் டார்சி தன் பதிலை கடிதமாக எழுதுகிறான். தான் திருமணத்தை தடை செய்ததை ஒப்புக் கொண்டு, எலிசபெத் குடும்பம் தாழ்ந்தது என்பதால் செய்ததாகக் கூறுகிறார். விக்காமிக்கு



தான் கெடுதல் செய்யவில்லை எனவும், விக்காம் தன் தங்கையை கடத்த முயன்றதையும் எழுதுகிறான். எலிசபெத்திற்கு யோசனை எழுகிறது. ஆனால் டார்சியை ஏற்க மனம் வரவில்லை. மீண்டும் தன்னூர் திரும்புகிறாள்.

எலிசபெத்தின் சித்தப்பா கார்டனர் தாம் முன்னிருந்த லாம்டன் என்ற ஊர் வழியாக டூர் போக இருப்பதால், எலிசபெத்தையும் அழைக்கிறார். லாம்டன் டார்சியின் ஊர். அவர் அரண்மனை பெம்பர்லி. சின்னம்மா **Mrs.** கார்டனர் எலிசபெத்துடன் வருகிறார். லாம்டன் வந்தவுடன் பெம்பர்லிக்கு போகலாமா எனக் கேட்கிறார். டார்சி இல்லை எனத் தெரிந்து கொண்டு எலிசபெத் சம்மதிக்கிறாள். வீடும், எஸ்டேட்டும் பிரமாதமாக இருக்கிறது. **Mrs.** ரெனால்ட்ஸ் வீட்டு மானேஜர். டார்சி நல்லவர் என அவர் மூலமாக அறிகிறார். லாம்டன் ஹோட்டலில் விக்காமைப் பற்றி கேள்விப்பட்டதெல்லாம் தவறான செய்திகள். பெம்பர்லியை விட்டு வரும்பொழுது டார்சி தற்செயலாய் சந்திக்கிறார். பிரியமாகப் பேசுகிறார். மறுநாள் தம் தங்கை ஜார்ஜியானாவை ஹோட்டலுக்கு அழைத்து வந்து அறிமுகப்படுத்துகிறார்.

எலிசபெத்திற்கு ஜேனிடமிருந்து லிடியா விக்காமுடன் ஓடிப் போனதாக சேதி வருகிறது. பின்னாலேயே டார்சி பெம்பர்லிக்கு எலிசபெத்தை அழைத்துப் போக வருகிறான். அவள் நிலையிழந்திருக்கிறாள். லிடியாவைப் பற்றிய செய்தியை டார்சியிடம் சொல்லிவிட்டு டூர்யை ரத்து செய்து சித்தப்பா, சின்னம்மாவுடன் ஊர் திரும்புகிறாள்.

சித்தப்பா வருமுன் அப்பா லிடியாவைத் தேடி இலண்டன் போயிருக்கிறார். சித்தப்பா லண்டன் போய் தகப்பனாரை திருப்பி அனுப்பிவிட்டு லிடியாவை கண்டுபிடித்து, **£** 10,000 கொடுத்து விக்காமை திருமணம் செய்ய சம்மதம் செய்து, பென்னட்டுக்குக் கடிதம் எழுதுகிறார். திருமணமாகி லிடியாவும் விக்காமும் ஊர் திரும்புகின்றனர். லிடியா பேசும்பொழுது டார்சி திருமணத்திற்கு வந்ததாகக் கூறுகிறார். எலிசபெத் கார்டனருக்கு எழுதி விவரம் தெரிந்து கொள்கிறாள். டார்சி லண்டனில் வந்து விக்காமைக் கண்டு, பணம் கொடுத்து திருமண ஏற்பாடு செய்து வேலை வாங்கிக் கொடுத்ததை எலிசபெத் அறிகிறாள். விக்காம் போய்விடுகிறான்.

ஒரு நாள் காலையில் டார்சியின் சின்னம்மா காதரின் எலிசபெத் வீட்டிற்கு வந்து ஊரெல்லாம் பேசுவது உண்மையா எனக் கேட்கிறாள். காரசாரமான வாதம் நடக்கிறது. டார்சியை மணக்கமாட்டேன் என உறுதி கேட்கிறாள் காதரின். எலிசபெத் மறுக்கிறாள். காதரின் லண்டனில் டார்சியைப் பார்த்து எவ்வளவு நன்றி கெட்ட பெண் எலிசபெத் எனக் கூறுகிறாள். தம் மகளை டார்சி மணக்க ஏற்பாடு செய்ததை எலிசபெத் கலைத்தது காதரீனுக்குக் கோபம்.

எலிசபெத் தன்னை மறுக்கவில்லை என்பதை காதரீன் மூலம் அறிந்த டார்சி நேரே அவள் ஊருக்கு பிங்லியுடன் வந்து அவளை மணக்கிறான். பிங்லி ஜேனை மணக்கிறான்.

❊ ❊ ❊

அண்ணன் - யார் எதைச் சாதித்தாலும் அது தனி மனிதனுக்குரியதன்று, சமூகத்திற்குரியது. ஏனெனில் மனிதன் சமூகத்தின் சார்பாகச் செயல்படுகிறான். பலன் சமூகத்திற்குரியது. £ 10,000 சம்பாதிப்பவருக்கு 6000 ஏக்கர் நிலம் உண்டு. சமூக நியாயப்படி இதில் வரும் வருமானத்தை இங்கு வேலை செய்பவர் அனைவரும் பகிர்ந்து கொள்ளவேண்டும், இதுவே ஆன்மீக நியாயம். கதையில் உலக வழக்குப்படி முதலாளிக்கு (கர்வி) இப்பணம் முழுவதும் வருகிறது. ஆரம்பநாட்களில் சொத்தைச் சம்பாதித்தவன் வலிமையானவன் என்பதால் அவன் வருமானத்தைப் பெற்றான். பிரெஞ்சுப் புரட்சியில் இதுபோன்ற உடமைகள் பறிபோயின. கதையை விமர்சனம் செய்பவர் பெருமிராசுதார் ஏழைப் பெண்ணை மணப்பதால் புரட்சியைத் தவிர்க்க முடிகிறது என்கிறார். புரட்சி மூலம் ஏழைகட்குப் போகும் சொத்து திருமணம் மூலம் போகிறது என்கிறார். எனவே புரட்சி விலகுகிறது. இரண்டாம் பெண்ணுக்குக் கர்வி வரனாக அமைவது புரட்சி போன்றது. இது பெண்ணின் குடும்பத்திற்கு அதிர்ஷ்டம்.

தம்பி - இதுவரை புரிகிறது.

அண்ணன் - கதையில் இந்த அதிர்ஷ்டம் வர கடைசி பெண் ஓடிப் போன நிகழ்ச்சியே காரணமாகிறது.

தம்பி - அதுவும் புரிகிறது.

அண்ணன் - வாழ்வு இரண்டாம் பெண் மூலம் இந்தக் குடும்பத்திற்கு அதிர்ஷ்டம் தர கடைசி பெண்ணை ஓடும்படிச் சொல்கிறது.

தம்பி - அதுதான் கதை, ஆனால் ஓடிப்போன பெண் அதிர்ஷ்டத்தின் கருவி என நினைக்கவும் மனம் கசக்கிறதே.



அண்ணன் - எல்லா பேரிலக்கியங்களிலும் இந்த அம்சம் உண்டு, வாழ்விலும் உண்டு. நாம் கவனிப்பதில்லை. *இந்த குடும்பத்திற்கு வந்த பெரிய அதிர்ஷ்டம் பெரிய அவமானத்தின் மூலம் வந்தது, எனவே நாம் எதை அவமானம், துர்ப்பாக்கியம் எனக் கருதுகிறோமோ அது வாழ்வுக்கும், இறைவனுக்கும் எதிரானவை என்பது மட்டும் புரிந்தால் போதும். தோற்றம் வேறு; உண்மை வேறு. உண்மை, தோற்றத்திற்கு எதிரானது.*

நல்லது மூலம் கெட்டதும், கெட்டது மூலம் நல்லதும் வெளிவரும். வாழ்வுக்கு இரண்டும் தேவை என்பதை இக்கதையில் காண்கிறோம். கடைசி பெண் ஓடிப்போனது கெட்டது, கர்வி மனம் மாறியது நல்லது என நாம் கருதுகிறோம். வாழ்வுக்கு இரண்டும் அவசியம். அவள் ஓடிப் போய் இவர்கள் வீட்டில் பிரச்சினை எழாவிட்டால் கர்வி இக்குடும்பத்திறகு உதவி செய்யும் சந்தர்ப்பம் வராவிட்டால், நல்லது என நாம் கருதும் 3 திருமணங்கள் நடந்திருக்கா.

தம்பி - புதியதாக இருக்கிறதே இக்கருத்தும், இந்த விளக்கமும், வேறேதும் உண்டா?

அண்ணன் - இக்குடும்பத்தில் நடந்த இந்த பெரிய நல்ல காரியங்களை சாதித்தது அருள்.

தம்பி - அருள் இங்கே எப்படி வந்தது?

அண்ணன் - நாம் அருளாகப் பெறுவதை அன்பாக (Love) வெளியிடுகிறோம் என்கிறார் அன்னை. கர்வியின் கர்வம் எவரும் விரும்பாதது, ஆனால் அவனை உந்துவது அழகோ, பணமோ இல்லை. இரண்டாம் பெண் அழகற்றவள் என்று கூற முடியாது. ஆனால் முதற் பெண்போல் அழகியல்ல. அழகும், பணமும் இல்லாத பெண்ணை அன்பால் கர்வி விரும்புகிறான். அந்த அன்பே எல்லா நல்ல காரியங்களையும் செய்கிறது.

தம்பி – ஏன் கர்வியின் அன்பை மட்டும் குறிப்பாகச் சொல்ல வேண்டும்? முதற்பெண், கடைசி பெண், எல்லாப் பெண்களுக்கும் அன்பில்லையா?

அண்ணன் – கவர்ச்சி, தேவை, பிரியம், பாசம், பற்று, அன்பு என உணர்ச்சியைப் பிரித்தால், உடலுக்கு தேவை, உணர்ச்சிக்கும் இளமைக்கும் கவர்ச்சி, மனதிற்குப் பிரியம், உறவுக்கு பாசம், பற்று எனக் கூறலாம். உச்சகட்டத்தில் அன்பை வைத்தால் அது ஆன்மாவுக்குரியது. உலகில் நடப்பதெல்லாம் divine love தெய்வீக அன்பால் என அன்னை கூறுகிறார். அன்பு என்பதை நாம் இக்கதையில் கர்வியிடம் மட்டுமே பார்க்கிறோம். அது தூய அன்பு, மற்றவை எல்லாம் அடுத்த நிலைகளைச் சார்ந்தவை.

தம்பி – எப்படி அதை மட்டும் அன்பு எனக் கொள்வது?

அண்ணன் – அவன் நாடுவது பணமோ, அழகோ அல்ல.

தம்பி – இளம்பெண்ணை இளைஞன் நாட எதுவும் தேவையில்லையே.

அண்ணன் – தேவை, கவர்ச்சி போன்ற அனைத்தும் தன்னை மட்டும் கருதுவது. அன்பு பிறரை மட்டும் கருதுவது. கர்வி பலன் எதுவும் எதிர்பார்க்கவில்லை, அவள் அன்பை பெறவும் முனையவில்லை. அவளைத் திருப்தி செய்வது மட்டுமே அவன் மனம் நாடுகிறது. அது அன்புக்கு அடையாளம். இரண்டாம் முறை அவன் தன்னை மணக்கும்படி கேட்டபொழுதும் 'உன் மனம் மாறவில்லை எனில் அதுவும் எனக்கு சம்மதம். நான் உன்னை வற்புறுத்த மாட்டேன்' என்று கூறுகிறான். அது அன்பால் மட்டுமே கூறமுடியும்.

தம்பி – இரண்டாம் பெண்ணுக்கு, இவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் எப்படி வந்தது என்பதற்கு விளக்கம் கூற முடியுமா?

அண்ணன் – அதுவும் ஓர் அன்னை சட்டம்.



தம்பி – 200 ஆண்டுகட்கு முன் எழுதிய கதை இது. அன்னை 100 ஆண்டுகட்கு முன் வந்தவர்.

அண்ணன் – மனித உருவம், அவதாரம், என்பது 100 ஆண்டு. உலகம் ஏற்பட்ட நாளாக 'அன்னை' இருக்கிறார். எல்லா சட்டமும் அவர் சட்டமே. 100 ஆண்டுகளாக அதிகமாக சட்டம் செயல்படுகிறது. ஒரு தகப்பார் 6 பிள்ளைகட்கு சமமாக சொத்து கொடுத்தால், பிள்ளைகள் தங்கள் வாழ்வின் முடிவில் சமமாக இருப்பதில்லை. பெற்றது சமம். பயன்படுத்திய வழிகள் வேறு. பலன் அதற்கேற்ப மாறுகிறது. 5 பெண்களுக்கும் வந்த அதிர்ஷ்டம் அளவில் ஒன்றே, சுபாவத்திற்கு தகுந்ததுபோல் பலன் மாறி வருகிறது.

தம்பி – இதுவரை கேள்விப்பட்டதில்லையே.

அண்ணன் – இதே கருத்தை அன்னை வேறு வகையாகக் கூறுகிறார். அதன் அம்சங்கள் பல.

* சூரியன் எல்லாப் பொருள்கள் மீதும் ஒரே அளவு தன் பிரகாசத்தை சொரிகிறான். வீட்டை மூடி வைத்தால் உள்ளே இருட்டாக இருப்பதால், சூரியன் வீட்டின் மீது இருளைப் பொழிகிறான் என்று பொருள் அல்ல.
    - அருளை அனைவர்க்கும் சமமாக அன்னை அளிக்கிறார்.
    - சமமாக இல்லாதது அருளாக இருக்க முடியாது.
* நம் சௌகரியம், பிரியம், சுபாவம் ஆகியவற்றிற்கேற்ப நாம் அருளைப் பயன்படுத்துகிறோம்.
* அருள் காலத்தைக் கடந்தது. காலம் அன்பனுக்கு தடையில்லை. வயதாகிவிட்டது. இனி என்ன செய்யமுடியும். அப்பொழுது அலட்சியமாக இருந்தேன் விட்டுப் போயிற்று என்பது அன்னையிடம் இல்லை.

இப்பொழுது உணர்ந்தால் எதையும் பெறலாம். நாம் பெறுவது நாம் உணர்வதைப் பொருத்திருக்கிறது. காலத்தையோ, சந்தர்ப்பத்தையோ, புற நிகழ்ச்சிகளையோ பொருத்ததில்லை. பெரிய பதவியிலுள்ள அன்பர், பெரும் செல்வரான அன்பர், எளிய அன்பர்க்கு கட்டுப்பட்டிருப்பதன் உட்பொருள் இதுவே. *அனைவரும் சமம் என்பது அருளுக்குரிய ஆன்மீக உண்மை.*

* எந்த அன்பரும் எதையும், எந்த அளவிலும் பெற முடிவு செய்தால், முடிவுக்குரிய முயற்சி எடுத்தால் பலிக்கும் என அன்னை கூறுகிறார்.

இரண்டாம் பெண் நாடுவது உண்மை. அடுத்த பெண்கள் அன்றாட சௌகரியத்தைக் கருதுகிறார்கள். அவரவர்கள் விழைவது அவரவர்கட்கு கிடைக்கிறது. அன்னை சட்டப்படி, அன்னையை ஒரே அளவில் ஏற்கும் அன்பர்கள் அனைவரும் பெறும் அருள் சமம். அதன் தோற்றம் வேறு. தோற்றத்தையும் நிர்ணயிக்க முடியும். IAS ஆபீசர்களில் ஒருவர் கலெக்டராக இருக்கிறார். அடுத்தவர் நில ஆர்ஜிதம் பார்க்கிறார். வேறொருவர் Record room (Archives) பொறுப்பிலிருக்கிறார். கலெக்டருக்கு முழு அதிகாரம். Recordலிருப்பவருக்கு அதிகாரமேயில்லை. ஆனால் சம்பளம், **rank** ஒன்றே. அடுத்த நாளே கலெக்டர் பதவிக்கு அவரும், **record**க்கு இவரும் மாற்றப்படலாம்.

தம்பி – இந்தக் கதை மூலமாக சொல்லக்கூடிய அன்னை சட்டம் வேறெதாவதுண்டா?

அண்ணன் – எல்லா சட்டங்களையும், எந்தக் கதை மூலமாகவும் சொல்லலாம்.

தம்பி – இரண்டாம் பெண்ணைத் தேடி பெரும் பணம் எப்படி வருகிறது?



தம்பி – அதற்கு முன் ※ பணம் என்றால் என்ன? என்று புரிந்து கொள்ளவேண்டும். இந்த கதையைப் பொருத்தவரை இரண்டு விஷயம் முக்கியம். 1. பணம் அதைவிட முக்கியமானதை நாடி வரும் (இது எல்லா விஷயத்திற்கும் பொது). சமூகப் புரட்சி ஏற்படும்பொழுது பணம் அதற்கெதிரானதை அல்லது அதற்கு தேவையானதை நாடி வரும். இக்கதை அதற்கு உதாரணம். கர்விக்கு £10,000 வருமானம், அவனுக்கு அவன் முக்கியம். அவனுக்கு வரும் மனைவி முக்கியம். வரும் மனைவி எஸ்டேட்டிற்கு மகுடமாக இருக்க வேண்டும். அதாவது தன்னைவிட உயர்ந்தவளாக இருக்கவேண்டும். அவனைச் சுற்றியுள்ளவர்கள் அவனை போற்றும் மனப்பான்மையுடன் இருப்பதால், அவனைவிட உயர்ந்த குணலட்சணங்களுள்ள பெண்ணை அவன் மனம் நாடுகிறது. சமூகம் மாறுகின்ற காலம் என்பதால், அவனைவிட உயர்ந்த குணமுள்ள இரண்டாம் பெண் – அவன் கர்வத்திற்கு பணியாதவள் அவளொருத்திதான் – அடுத்த தாழ்ந்த செல்வ நிலையிலிருந்து அவனுக்கு அமைகிறாள்.

தம்பி – அந்த நேரம் பிரெஞ்சுப் புரட்சி நடந்து தனவந்தர்களை ஏராளமாகக் கொலை செய்தார்கள். பணமுள்ளவன் பணமில்லாத பெண்ணை மணப்பது பணத்தைக் 'கொலை' செய்வது போலல்லவா? அதுவே புரட்சிக்கு பதிலான மாற்றம். ஆளும் வர்க்கத்தைக் கொலை செய்வது புரட்சி. அவர்களுடைய குணங்களை – கர்வம், அலட்சியம் – மாற்றுவது புரட்சியல்லவா? புரட்சி நடந்து 20 ஆண்டுகளுக்குப்பின் கர்வம், அலட்சியத்தை ஆளும் வர்க்கத்தினர் கைவிடுகின்றனர். தாமே முன்வந்து அக்குணங்களைக் கைவிடுவதல் புரட்சிக்கு சமம். இந்த மாற்றத்தில் பணம் இருக்குமிடத்திலிருந்து,

※ *பார்க்க பக்கம் - 58*

இல்லாத இடத்திற்கு மாறுகிறது. அதுபோல் இரண்டாம் பெண் பணம் பெறுகிறாள்.

தம்பி - திடீரென பெரும் பணம் இரண்டாம் பெண்ணுக்கு வருவது ஆச்சரியமாக இருக்கிறது.

அண்ணன் - அன்பர்கள் பணத்தை அளவு கடந்து பெற முடியும் என்று 'பணம்' என்ற கட்டுரை கூறுகிறது. அதில் முறை விளக்கமாக இருக்கிறது. இரகஸ்யம் முறையிலில்லை. கருவில் உள்ளது. கரு Self - giving பரநலம். மனிதன் தான் சம்பாதிப்பதைவிட பிறர் சம்பாதிக்கக் கூடாது என்பதில் கருத்தாக இருக்கிறான். இது மனித வாழ்வு. வாழ்வில் உள்ளவனுக்கு அன்னை முறை பயன் தராது. பிறர் வளம் பெறுவதில் மனம் மலர்வதே அன்னை சட்டம். அம்மனப்பாங்கு உள்ளவர்க்கே 'பணம்' என்ற கட்டுரை பயன்படும். முதலிரண்டு பெண்கட்கும் தாழ்ந்த உள்ளமில்லை. அதனால் உயர்ந்த செல்வம் வருகிறது.

குறிப்பாக பெரும் பணம் பெற்ற இரண்டாம் பெண்ணுக்கு ஆதாயத்தை நாடும் மனம் இல்லவேயில்லை. She is not at all mercenary. ஆதாயத்தை நாடாதவரை பணம் விரைந்து நாடும் என்பது சட்டம்.

தம்பி - ஸ்ரீ அரவிந்தர் ஒரு சட்டம் உண்மையானால் அதன் எதிர்ச்சட்டமும் உண்மை என்கிறாரே. அதற்கு இங்கு உதாரணம் உண்டா?

அண்ணன் - ஓடிப்போன பெண் அதற்கு உதாரணம். அது ஆதாயத்தை மட்டும் நாடும் பெண். அவள் ஒருபடி மேலே செல்கிறாள். தான் ஓடிப்போனது தவறு என்றே அவளால் நினைக்க முடியவில்லை. அவளுக்குத்தான் முதலில் திருமணமாகிறது. திருமணம் எனப் பெண்ணின் மனத்தின்படி அவளுடைய திருமணமே



மிக உயர்ந்தது. கண் நிறைந்த கணவன் பெண்ணுக்கு முக்கியம். திருமணத்தைப் பொறுத்தவரை கடைசியாக நினைவுக்கு வருவது குணம். பெண் அழகியானால், ஆணுக்கு அவளுடைய கெட்ட குணம், மட்ட குணம் கண்ணுக்குத் தெரியாது. அவள் எந்தத் தவறு செய்தாலும் ஆணின் மனம் அவள் அழகை மட்டுமே காணும். காளிதாசனை அப்படித்தான் அரசகுமாரி மணந்தாள். மாதம் ரூ.3000/- கை செலவு செய்யும் பெண் மாதம் ரூ.3000/- சம்பளம் வாங்கும் அழகனை, அவன் அழகுக்காக மட்டும் ஆர்வமாக விரும்பினாள். பல பெண்களை வெட்கமின்றி நாடுபவன் அழகன் எனப் பெயர் பெற்றவன். அவன் அழகனுமில்லை. அழகுணர்ச்சி உள்ளவர் அவன் விகாரமானவன் என அறிவார். சிவந்த மேனியுடையவன். பெண்களை தவறாக நாடியதால் அவனைப் பிடித்து உதைத்து, துணிகளைப் பிடுங்கிப் கொண்டு நிர்வாணமாக விரட்டினர். அதை அறிந்த பின்னும், அவனை மனமார பெண்ணுள்ளம் நாடுகிறது. அவர் நல்லவர் என பெண் மனம் மணக்கிறது. 'அவரை' நினைத்தால் கணவனை 'அவன்' என்கிறது மனம். மனிதன் ஆசை வெட்கமறியாது என அனுதினமும் நிரூபிப்பவன். இக்கதையில் அழகன் ஓர் பெண்ணுடன் ஓடிப்போன பின்னும் எந்தப் பெண்ணின் மனமும் அவனைத் தவறு என நினைக்கவில்லை. அத்தனை பேர் மனமும் அவன் அழகைப் போற்றுகிறது. ஆண் பெண் கவர்ச்சிக்கு அடிப்படை அழகு என்பதை கதை எல்லாயிடங்களிலும் எடுத்துக் கூறுகிறது.

- தொடரும்.

❋ ❋ ❋

## ※ பணம்

வறுமை என்பது பணமில்லை. பணப்பற்றாக்குறை என்பது. ஆன்மீக சட்டப்படி உயர்ந்த எண்ணம், பரநலம், பரந்த மனப்பான்மையுள்ள அன்பர் எவரும் எந்த அளவு பணத்தையும் உற்பத்தி செய்யலாம் என்பது உண்மை. அதை சாதிக்கும் முறை, அதன் தத்துவம் ஆகியவற்றிற்குரிய அடிப்படைக் கருத்துக்கள் கீழ்கண்டவை.

* சிருஷ்டி சத்தில் ஆரம்பித்து, சித், ஆனந்தம், சத்திய ஜீவியம் வழியாக மனத்தில் முடிகிறது. மனமே சிருஷ்டியின் முடிவு.

* வாழ்வும், ஜடமும் மனத்தின் பிற உருவங்களே. மனம் சிருஷ்டித்ததே வாழ்வு.

* பணம் வாழ்வின் பகுதி.

* வாழ்வையே உற்பத்தி செய்த மனத்தால், அதன் பகுதியான பணத்தை உற்பத்தி செய்ய முடியும்.

* மனத்திலுள்ள எண்ணம், அதனுள் உள்ள உறுதியுடன் இணைந்து செயல்பட்டால் சக்தி பிறந்து வாழ்க்கையாகிறது என்பது ஸ்ரீ அரவிந்தம். சக்தி உருவம் பெற்றால் பொருள்களாக மாறி ஜட உலகமாகிறது எனவும் கூறுகிறது.

* எண்ணமும், உறுதியும் இணைந்தால் வாழ்வு எழுகிறது எனில் பணம் வாழ்வில் பகுதி என்பதால், உறுதி பணத்தை உற்பத்தி செய்ய முடிவு செய்தால், அதற்கு எண்ணம் இசைந்தால் பணம் அபரிமிதமாக உற்பத்தியாகும்.

* உறுதி என்பது திறமை. திறமை என்பது தெளிவு பெற்ற சக்தி. எண்ணம் என்பது குறிக்கோள்.

பணம் ஈட்டும் திறமை, தெளிவு பெற்று, எண்ணம் அதை இலட்சியமாக ஏற்றால் பணத்தை



மனம் உற்பத்தி செய்யும் என்ற கொள்கை எழுகிறது.

* பணத்தை சேகரம் செய்தவரிடம் நாம் இதைக் காண்கிறோம். பணத்தை எந்த வழியாகவும் சேகரம் செய்யலாம்.. அருள் மூலம் நல்ல முறையில் மட்டும் சேகரம் செய்ய முடியும்.

* அபரிமிதம் எப்படி எழுகிறது?

  - வாழ்வு என்பது பேரரங்கம். எண்ணமும், உறுதியும் வாழ்வையே சிருஷ்டித்தவை. அதனால் பகுதியான பணத்தை சிருஷ்டித்தால் பலன் அபரிமிதமாக இருக்கும்.

  - எண்ணம் நல்லதாகவோ, கெட்டதாகவோ இருக்கலாம். கெட்ட எண்ணத்தில் சுலபமாக சம்பாதிக்கலாம். நல்ல எண்ணத்தால் பணம் சம்பாதிப்பது சிரமம். பலன் குறைவு. ஆனால் கெட்ட எண்ணம், நல்ல எண்ணமாக மாறிய பின் அதன் திறன் அபரிமிதமாகப் பெருகும். திருடன் மனம் மாறி வியாபாரம் செய்தால் சிறப்பாக இருப்பானல்லவா?

  - கெட்ட முறையில் சம்பாதிக்கும்பொழுது மனம் உறுத்தும். முறை நல்லதானால் உறுதி தெளிவாகச் செயல்படும்.

  - பணம் பகுதி என்பதாலும், எண்ணம் நல்லது என்பதாலும், உறுதி மலர்ந்து செயல்படுவதாலும் பலன் அபரிமிதமாக எழுகிறது.

  அன்னை சக்தி சேர்ந்தால் அபரிமிதம், அளவற்றதாகிறது.

  **கட்டுரையின் கரு : பிறர் வாழ்வு மலர்வதில் பெருமிதம் கொள்ளும் அன்பர், பணம் திரட்டும் முறைகளை அறிந்து, நல்ல முறையில் உறுதியுடன் செயல்பட்டால் அருள் அவர் முயற்சிக்கு அபரிமிதமான பலன் உடனே தரும்.**

* சக்தி அதிகமானால் அதிகம் சம்பாதிக்கலாம். உடலுழைப்பை மன உழைப்பாக்கினால் பலன் பெருகும். பணம் என்பது ஒரு

organisation முறை என்பதால் மனம் முறைபட்டால் சம்பாதிக்கும் திறன் பெருகும். விரைவாக செயல்படுவது பெரிதும் உதவும். பணம் என்பதனுள் பொதிந்துள்ளவை நம்பிக்கை, சக்தி, முறை (organisation). சர்க்கார் மீது நம்பிக்கையிருப்பதால் பேப்பரான நோட்டை ஏற்கிறோம். மனித உழைப்பு - சக்தி - பொருளை உற்பத்தி செய்வது பணமாகிறது. நாம் முயன்று செயல்பட்டு சாதிப்பவை - திருமணவிழா, வீடு கட்டுவது போன்றவற்றிற்கு முன்போல் நாமே முயல வேண்டாம். முயற்சியுடையவர் பணம் பெற்று நமக்காக அதை செய்கிறார்கள் - பணத்தால் இன்று நடக்கின்றன. எனவே இவை மூன்றும் பணம். இவை முக்கிய அம்சங்கள். இவற்றை நம் மனம், மனத்தின் தன்மையால் மட்டும் உயர்த்த முடியும் என்பதால் மனத்தால் பணத்தை உற்பத்தி செய்ய முடியும் என்றேன்.

* ஆயிரம் ஆண்டுக்கு முன்னால் நிலம் மட்டுமே விளைந்தது. அந்த விளைச்சல் பணமாயிற்று. 300 ஆண்டுக்கு முன்னால் நிலம் மட்டும் விளைச்சல் தரவில்லை. நானும் விளைபொருள்களை உற்பத்தி செய்கிறேன் என பாக்டரி வந்தது. கடந்த 50 ஆண்டாக நிலமும், பாக்டரியும் செய்வதை service தொழில் செய்கிறது. டெய்லர், தச்சன், வக்கீல், ஆசிரியர் போன்ற தொழில்கள் பல நூறு ஆண்டுகளாக இருந்தாலும் பாக்டரி, நிலத்தை நம்பியிருந்தன. இப்பொழுது service தொழிலை நம்பி பாக்டரியிருக்கிறது. நிலமும், பாக்டரியும், தொழிலும் இதுவரை பணத்தை உற்பத்தி செய்தது போல் இனி மனம் பணத்தை உற்பத்தி செய்யும். இது எப்படி முடியும் என்பதை விளக்குவதே இலட்சியம்.

* Process of creation of money பணம் இதுவரை உற்பத்தியான முறையை மனம் அறிந்து கொண்டால்,



அம்மனத்திற்கு பணத்தை உற்பத்தி செய்யும் திறன் எழுகிறது. எந்த தொழிலும் பணத்தை உற்பத்தி செய்கிறது. பணம் என்பதன் இரகஸ்யத்தை அறிந்தவர்க்கு எந்த தொழிலின் இரகஸ்யமும் விளங்கும். அதனால் எல்லா தொழில்களையும் சிறப்பாக நடத்தும் ஞானம் அவருக்குண்டு. அந்த ஞானம் முழுமை பெற்றவுடன் அது சக்தியாகிறது. பணம் திரட்டுவோர் அச்சக்திக்கு உட்படுவார்கள். அதன் மூலம் மனம் பணத்தை உற்பத்தி செய்யமுடியும். இந்த ஞானமுடையவர் எந்த துறையில் வேலை செய்தாலும் அத்துறை ஈட்டுவதுபோல் 10 அல்லது 100 மடங்கு ஈட்டுவார் என்பதை மனம் பணத்தை உற்பத்தி செய்யும் என்கிறேன்.

* வேறு வகையாக ஓரளவு இக்கொள்கையை உலகம் இன்று பூர்த்தி செய்கிறது. ரூ.30,000க்கு வாங்கிய கலைக்களஞ்சியம் இன்று நெட்டில் இலவசமாகக் கிடைக்கிறது, எனில் இப்பணம் உபரி. இதுபோல் **internet** மூலம் மக்கள் கையில் மறைமுகமாக பணம் உபரியாகிறது. உபரியாகிறது எனில் பணம் அதிகமாக உற்பத்தியாகிறது எனப் பொருள்.

* 30 ஆண்டு வேலை செய்து ஓய்வு பெற்ற ஒருவர் 92 வயதிருந்தால் 32 ஆண்டு பென்ஷன் பெறுகிறார். அதாவது 1 ஆண்டு சேவைக்கு 2 ஆண்டு சம்பளம் பெறுகிறார். பணம் உபரியாகிறது, இரட்டிக்கிறது.

* பணம் பற்றாக்குறையாக இருப்பதால் அதற்கு இன்று மரியாதையுண்டு. காற்று, தண்ணீர்போல அளவுகடந்து இனமாகக் கிடைத்தால் அதற்கு மரியாதை போய்விடும். இன்டர்நெட், வெளிநாட்டு போன் கால் phone call க்கு உள்ளூர் call charge வசூல் செய்கிறது. எந்தப் புத்தகமும் internetஇல் இனாமாகக் கிடைக்கும். இது நீடித்தால் பணம் கொடுத்து

வாங்க வேண்டியவை குறையும். தொடர்ந்தால் பணம் தேவையில்லை என்ற நிலையும் ஒரு நாள் வரும். கம்ப்யூட்டர் வந்தபின் பணம் ஒரு ஊரிலிருந்து அடுத்த ஊருக்கு சில நிமிடத்தில் போகிறது. இதுபோல் 1 நாளில் 2 trillion dollar கம்ப்யூட்டர் மூலம் நாடுவிட்டு நாடு போகிறது. லட்ச ரூபாய் முதல் போட்டவன் 10,000 ரூபாய் சம்பாதித்தால் 10% இலாபம், அதே சரக்கு 6 மாதத்தில் விற்றால், 6 மாதத்தில் 10%, 1 வருஷத்தில் 20% இலாபம் வருகிறது. ஒரு மாதத்தில் விற்றால் 120% இலாபம் வரும். ஒரு லட்ச ரூபாய்க்கு 1 வருஷத்தில் 1,20,000 இலாபம் வரும். பணம் வேகமாகப் பிரண்டால் (turnover) இலாபம் அதிகமாக வரும். இது பணத்தை உபரியாக உற்பத்தி செய்வதாகும். ஏற்கனவே இலட்ச ரூபாய் முதல் போட்டவர் இப்பொழுது 12 இலட்சம் முதல் போட்டவர் பெறும் இலாபம் பெறுகிறார், அதாவது 12 மடங்கு இந்த வியாபார முறை பணத்தைப் பெருக்குகிறது. **Internet** அதுபோன்ற transactions- ஐ க்ஷணத்தில் செய்கிறது. மாதக்கணக்கு, வாரக் கணக்கில் நடந்தவை 1 நிமிடத்தில் நடந்தால் ஆயிரம் மடங்கு பணத்தை உற்பத்தி செய்வதாக நாம் அறிகிறோம். வேகத்தை அதிகரிப்பதால் பணம் பெருகுகிறது.

* மனத்தால் வேகத்தை அதிகரிக்கும் கருவிகளைச் செய்யமுடியும் என்பதுபோல் மனம் வேகத்தை அளவுகடந்து அதிகரிக்கும்.

* வேலை, உழைப்பு, நம்பிக்கை, செலாவணி, வேகம், முறை, எண்ணம், கருத்து, சக்தி ஆகியவை பணத்தை உற்பத்தி செய்தவை. மனம் இத்தனையையும் தானே உற்பத்தி செய்யவல்லது என்பதால் மனத்தால் பணத்தை உற்பத்தி செய்யமுடியும்.



## *இதை நம் வாழ்வில் சாதிப்பதெப்படி?*

* மனம் மட்டும் செயல்பட்டு பணம் உற்பத்தியாகும் என்பது தத்துவரீதியாக உண்மை. நடைமுறையில் அதை எப்படிப் புரிந்து கொள்வது?

* உடலால் செய்தவற்றையும், உணர்வால் செய்பனவற்றையும் மனத்தால் செய்தால் அதிகப் பணம் சம்பாதிக்கலாம். எதிரி நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டால் உடலால் செயல்படுபவன், நேரே எதிரியைப் போய் தாக்கி விடுதலை பெறமுயல்வான். உணர்வால் செயல்படுபவன், ஊரைக் கூட்டி நியாயம் கேட்டு நிலத்தைப் பெறுவான். அறிவால் செயல்படுபவன் சிந்திப்பான். எதிரி எதற்குக் கட்டுப்படுவான், எதை நம்புகிறான், ஜாதகத்தை நம்புபவனானால், ஜாதகப்படி அவன் காரியம் தோற்கும் எனக் காட்டலாமா? கர்மத்தை நம்புகிறானா? சட்டத்தை நம்புகிறானா? எதை நம்புகிறான் என யோசனை செய்வான். இவன் நாணயஸ்தன் என்பதால் சர்க்கரை ஆலை 15 ஏக்கர் பண்ணையை இவனை நம்பி கொடுத்திருக்கிறது என்றால், அவனிடம் போய் உன் நாணயத்தை ஆலையில் போய் சொல்வேன் என்பான். இவன் நிலம் திரும்ப வரும். அறிவால் செயல்படும்பொழுது பலன் அதிகம். பணம் ஈட்டும் செயல்களை அறிவு நிலைக்கு உயர்த்தினால் அபரிமிதமாகப் பணம் பெருகும்.

* நாம் செய்யும் தொழிலில் இன்று அதிகபட்ச நுணுக்கங்கள் எவ்வளவு உள்ளதோ அத்தனையும் பின்பற்றினால் அறிவு செயல்படும். அத்துடன் அருள் சேர்ந்தால் தொழில் அபரிமிதமாகப் பெருகும்.

❋ ❋ ❋

**MALARNDHA JIVIYAM**

Form IV (See Rule 8)

Statement about ownership and other particulars about Malarndha Jiviyam (according to Form No.IV, Rule 8 circulated by the Registrar of Newspaper for India).

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Pondicherry |
| 2. | Period of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | **Mrs. Anuradha Sriram,** Integra, 51, II cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry 605 005. |
| 4. | Publisher's Name | : | **Mr. P.V. Balakrishnan,** 177, Pappammal koil street, Pondicherry 605 012. |
| 5. | Editor's Name | : | **Karmayogi** |
| | Nationality | : | Indian |
| | Address | : | Plot 4, Venkata Nagar extn., Pondicherry 605 012 |
| 6. | Name and address of the individual who owns the newspaper and partners or shareholders holding more than 1% of the capital. | : | **The Mother's Service Society,** Plot 4, Venkata Nagar Extn., Pondicherry 605 011. |

I, (P.V. Balakrishnan) hereby declare the particulars given are true to the best of my knowledge and belief.

Date : 01-03-2001

**(P.V. BALAKRISHNAN)**
Signature of the Publisher.


*புதிய வெளியீடு*

**இரத்தினச் சுருக்கம்**

**Life Divine-ன் சுருக்கம்**

**கர்மயோகி**

விலை ரூ.20/-

தபாலில் பெற ரூ.10/- சேர்த்து **M.O.** செய்யவும்



Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi